ஆமோஸ் – முன்னுரை

காலமும் இடமும்

ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் கி.மு. 824-810 ஆவது வருஷங்களில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

ஆமோஸ் தீர்க்கதரிசி. (ஆமோ 1:1; ஆமோ 7:8; ஆமோ 8:1-2).

மையக்கருத்து

1. யூதர்கள்மீதும், புறஜாதியார் மீதும் அவர்களுடைய பாவங்களின் நிமித்தம், கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் செய்த கலகங்களின் நிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.
2. தேவனுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையேயுள்ள பிரச்சனைகள்.
3. இஸ்ரவேல் நியாயத்தீர்ப்பைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய விதம்.
4. மேசியாவின்கீழ் இஸ்ரவேல் தேசம் இறுதியாக மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவது.

ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டதற்கான நோக்கம் வருமாறு:

1. தேவன் பாவத்தைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதை விளக்குவது.
2. யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் பாவம் செய்த எல்லோர்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பதை அறிவிப்பது.
3. ஒவ்வொரு தேசத்தின்மீதும் நியாயத்தீர்ப்பு ஏன் வருகிறது என்பதைக் கவனமாக விளக்குவது.
4. இஸ்ரவேல் தேசத்தார் தேவனால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாகவும், ஆசீர்வதிக்கப் பட்டவர்களாகவும் இருக்கின்ற போதிலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்களும் தப்பிக்க முடியாது என்பதை விளக்குவது.
5. இஸ்ரவேல் தேசம் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போன நிலைமையை விளக்குவதும், அவர்களுக்கு எதிராகத் தேவனுடைய வழக்கை விவரிப்பது.
6. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தங்களுடைய வழிகளை மாற்றிக் கொள்ளவில்லையென்றால், அவர்களுக்கு நிச்சயமான அழிவு உண்டாகும் என்பதை அறிவிப்பது. (ஆமோ 2:4-9:10).
7. அநேகம் முறை எச்சரிக்கப்பட்ட பின்பும், இஸ்ரவேல் பாவத்திலும், கலகத்திலும் தொடர்கிறது. ஆகையினால் கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம் தேசத்தை அழிப்பது அவசியமாக இருக்கிறது என்பதை அறிவிப்பது.
8. ஆமோஸ் இந்தப் புஸ்தகத்தின் முடிவில் இஸ்ரவேல் புத்திரருக்கு உற்சாகமான வார்த்தைகளைக்கூறி முடிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் முழுவதுமாக மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, ஒரு தேசமாக மறுபடியும் ஸ்தாபிக்கப் படுவார்கள்.
9. இஸ்ரவேல் தேசம் மேசியாவின்கீழ் ஆசீர்வாதமாக இருக்கும். (ஆமோ 9:11-15).

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 9

வசனங்கள் - 146

கேள்விகள் - 31

புதிய தீர்க்கதரிசனங்கள் - 14

கட்டளைகள் - 28

ஆமோஸ் – முன்னுரை

வாக்குத்தத்தங்கள் - 2

முன்னறிவிப்புக்கள் - 117

ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (ஆமோ 1:2,3,6,9,11,13; ஆமோ 2:1,4,6; ஆமோ 3:1,11,12,13; ஆமோ 4:1; ஆமோ 5:1,4,16; ஆமோ 6:1; ஆமோ 7:1,3,4,6,8,15,17; ஆமோ 8:2,4,7,9,11; ஆமோ 9:1,7,13,15).

பொருளடக்கம்

I. ஆறு புறஜாதி வல்லமைகளுக்கு எதிராக தீர்க்கதரிசனங்கள்

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி (1:1)
2. நியாயத்தீர்ப்பின் அறிவிப்பு (1:2)
3. தமஸ்குவிற்கு எதிராக (1:3-5)
4. பெலிஸ்தியாவிற்கு எதிராக (1:6-8)
5. தீருவிற்கு எதிராக (1:9-10)
6. ஏதோமிற்கு எதிராக (1:11-12)
7. அம்மோனுக்கு எதிராக (1:13-15)
8. மோவாபிற்கு எதிராக (2:1-3)

II. யூதாவிற்கும் இஸ்ரவேலிற்கும் எதிராக தீர்க்கதரிசனங்கள்

1. யூதாவிற்கு எதிராக பாபிலோன் (2:4-5)
2. இஸ்ரவேலுக்கு எதிராக அசீரியா (2:6-16)

III. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலின் முழு குடும்பமும்

1. கேட்பதற்கும் பதில் கூறுவதற்கும் அழைப்பு (3:1-8)
2. இஸ்ரவேலின் பாவங்களைக் காணுமாறு அழைப்பு (3:9-10)
3. அசீரியாவிடம் சிறையிருப்பு (3:11-15)
4. இஸ்ரவேலின் பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (4:1-3)
5. பெத்தேலில் இஸ்ரவேலின் மாய்மாலம் (4:4-5)
6. தேவனுடைய ஐந்து நியாயத்தீர்ப்புக்கள் இஸ்ரவேலை உடைப்பதற்குப் பதிலாக கடினப்படுத்திற்று (4:6-11)
7. தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு (4:12-13)

IV. புலம்பல்கள், நியாயத்தீர்ப்புக்கள், புத்திமதிகள்

1. புலம்பல் - இஸ்ரவேலின் அழிவு 90 சதவீதம் இருக்கும் (5:1-3)
2. நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு மூன்று அம்ச புத்திமதி (5:4-9)
3. பத்து அம்ச பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (5:10-13)
4. வரப்போகிற நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு நான்கு அம்ச புத்திமதி (5:14-15)
5. ஐந்து அம்ச புலம்பல் - காரணம் (5:16-17)
6. கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ (5:18-20)
7. ஏழு அம்ச மாய்மாலம் (5:21-24)
8. விக்கிரகாராதனையும் நியாயத்தீர்ப்பும் (5:25-27)
9. சீயோனிலே நிர்விசாரமாய் இருக்கிறவர்களுக்கும் மனுஷரை நம்புகிறவர்களுக்கும் ஐயோ (6:1-6)
10. அசீரியாவிடம் சிறையிருப்பு (6:7-14)

V. அடையாளங்கள் - தீர்க்கதரிசனங்கள்

1. வெட்டுக்கிளிகள் - அழிவு (7:1-3)
2. அக்கினி - அழிவு (7:4-6)

ஆமோஸ் - முன்னுரை

3. தூக்குநூல் - இனிமேல் இரக்கமில்லை (7:7-9)

4. இராஜாவிற்கு முன்பாக அமத்சியா ஆமோசின்மீது குற்றம் சாட்டுகிறான் (7:10-13)

5. அமத்சியாவிற்கு ஆமோசின் பதிலுரை (7:14-17)

6. பழுத்த பழங்களுள்ள கூடை - இஸ்ரவேல் விரைவில் அழிந்து போகும் (8:1-3)

7. இஸ்ரவேலின் பத்து பாவங்கள் (8:4-6)

8. நியாயத்தீர்ப்பும் அலைந்து திரிவதும் (8:7-14)

9. போதிகையை அடி - முழுமையான அழிவு (9:1-4)

10. சிதறிப்போவது பற்றிய கடைசி தீர்க்கதரிசனம் (9:5-10)

11. மேசியாவின்கீழ் தாவீதின் இராஜ்ஜியம் மீட்கப்படும் (9:11-12)

12. இஸ்ரவேலின் வருங்கால மீட்பு (9:13-15)

ஆமோஸ் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆறு புறஜாதி வல்லமைகளுக்கு எதிராக தீர்க்கதரிசனங்கள் - (1:1-2:3; ஏசா 13-23; எரே 45-51; எசே 25-32; செப் 2)

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி - (2இராஜா 14:23-15:7; 2நாளா 26)

ஆமோ 1:1 தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் இருந்த ஆமோஸ், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய எரொபெயாமின் நாட்களிலும், பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்கு முன்னே, இஸ்ரவேலைக் குறித்துத் தரிசனங்கண்டு சொன்ன வார்த்தைகள்.

"ஆமோஸ்.........சொன்ன வார்த்தைகள்" - யோவேல் புஸ்தகத்தின் முன்னுரையில் "கர்த்தருடைய வசனம்" (யோவே 1:1) என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் புஸ்தகத்தில் "ஆமோஸ்.........சொன்ன வார்த்தைகள்" (ஆமோஸ் 1:1) என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் ஆமோஸ் புஸ்தகத்தில் கூறப் பட்டிருக்கும் எல்லா வசனங்களும் ஆமோஸ் தன் சொந்த ஞானத்தினால் பேசினார் என்று கூறமுடியாது. அவர் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே பேசினார். "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" (ஆமோஸ் 1:3) என்னும் வார்த்தையை ஆமோஸ் பயன்படுத்தியிருக்கிறார். ஆமோஸ் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தையாகும். (ஆமோ 3:1; ஆமோ 7:16).

"மேய்ப்பன்" - தீர்க்கதரிசிகளில் ஆமோஸ் மாத்திரமே தன்னுடைய தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இவர் ஒரு மேய்ப்பராகவும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவராகவும் இருந்தார். (ஆமோ 1:1; ஆமோ 7:14). எரேமியாவும், எசேக்கியேலும் ஆசாரியர்கள். (எரே 1:1; எசே 1:3).

"இஸ்ரவேலைக்குறித்து" - ஆமோஸ் எப்பிராயீமின் பத்துக் கோத்திரத்தாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். இவர்கள் இஸ்ரவேல் என்று இங்கு அழைக்கப் படுகிறார்கள்.

"உசியாவின் நாட்களிலும்....... எரொபெயாமின் நாட்களிலும்" - யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களிலும் ஆமோஸ் தீர்க்கதரிசன ஊழியம் செய்திருக்கிறார்.

"பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்குமுன்னே" - அந்நாளில் மிகப்பெரிய பூமியதிர்ச்சி ஒன்று உண்டாயிருந்தது. (சக 14:5).

2. நியாயத்தீர்ப்பின் அறிவிப்பு

ஆமோ 1:2 கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; அதினால் மேய்ப்பரின் தாபரங்கள் துக்கங்கொண்டாடும்; கர்மேலின் கொடுமுடியும் காய்ந்துபோகும்.

தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்........" (ஆமோ 1:2-2:16) ஆமோ 1:2 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆமோ 1:3-2:16 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் தமஸ்குவைத் தண்டிப்பேன். (ஆமோ 1:3).
2. ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்; அது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும். (ஆமோ 1:4).
3. நான் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைப்பேன். (ஆமோ 1:5).
4. குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கில் சங்காரம் பண்ணுவேன்.

ஆமோஸ் - தொகுப்புரை

1 அதிகாரம்

5. செங்கோல் செலுத்துகிறவனைப் பெத்ஏதேனிலும் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

6. அப்பொழுது சீரியாவின் ஜனங்கள் கீருக்குச் சிறைப்பட்டுப்போவார்கள்.

7. நான் காத்சாவைத் தண்டிப்பேன். (ஆமோ 1:6).

8. காத்சாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதினுடைய அரமனைகளைப் பட்சிக்கும். (ஆமோ 1:7).

9. நான் குடிகளை அஸ்தோத்தில் சங்காரம் பண்ணுவேன். (ஆமோ 1:8).

10. செங்கோல் செலுத்துகிறவனை அஸ்கலோனில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

11. என் கையை எக்ரோனுக்கு விரோதமாகத் திருப்புவேன்.

12. பெலிஸ்தரில் மீதியானவர்கள் அழிவார்கள்.

13. நான் தீருவைத் தண்டிப்பேன். (ஆமோ 1:9).

14. தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும் (ஆமோஸ் 1:10)

15. நான் ஏதோமைத் தண்டிப்பேன். (ஆமோ 1:11)

16. தேமானிலே தீக்கொளுத்துவேன்; அது போஸ்றாவின் அரமனைகளைப் பட்சிக்கும் (ஆமோ 1:12).

17. நான் அம்மோனைத் தண்டிப்பேன். (ஆமோ 1:13).

18. ரப்பாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது யுத்தநாளின் முழக்கமாகவும், பெருங்காற்றின் புசலாகவும் அதின் அரமனைகளைப் பட்சிக்கும். (ஆமோ 1:14).

19. அம்மோனின் ராஜாவும், அவனுடைய அதிபதிகளும் சிறைப்பட்டுப்போவார்கள் (ஆமோ 1:15).

20. நான் மோவாபைத் தண்டிப்பேன். (ஆமோ 2:1).

21. மோவாப் தேசத்தில் தீக்கொளுத்துவேன்; அது கீரியோத்தின் அரமனைகளைப் பட்சிக்கும் (ஆமோ 2:2).

22. மோவாபியர் அமளியோடும் ஆர்ப்பரிப்போடும் எக்காள சத்தத்தோடும் சாவார்கள்.

23. நியாயாதிபதியை அவர்கள் நடுவில் இராதபடிக்கு நான் சங்காரம் பண்ணுவேன். (ஆமோ 2:3).

24. அவனோடுகூட அவர்களுடைய பிரபுக்களையெல்லாம் கொன்றுபோடுவேன்.

25. நான் யூதாவைத் தண்டிப்பேன். (ஆமோ 2:4).

26. யூதாவிலே நான் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும் (ஆமோ 2:5)

27. நான் இஸ்ரவேலைத் தண்டிப்பேன். (ஆமோ 2:6).

28. வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை; பலவான் தன் பலத்தினால் பலப்படுவதுமில்லை (ஆமோ 2:14).

29. பராக்கிரமசாலி தன் பிராணனைத் தப்புவிப்பதில்லை.

30. வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதில்லை. (ஆமோ 2:15).

31. வேகமானவன் தன் கால்களால் தப்பிப்போவதுமில்லை; குதிரையின் மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை.

ஆமோஸ் – தொகுப்புரை

1 அதிகாரம்

32. பலசாலிகளுக்குள்ளே தைரியவான் அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான். (ஆமோ 2:16).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சிப்பார். (ஆமோ 1:2).
2. எருசலேமிலிருந்து சத்தமிடுவார்.
3. மேய்ப்பரின் தாபரங்கள் துக்கங் கொண்டாடும்.
4. கர்மேலின் கொடுமுடி காய்ந்துபோகும்.

3. தமஸ்குவிற்கு எதிராக - (ஏசா 17:1)

ஆமோ 1:3 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தமஸ்குவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் கீலேயாத்தை இருப்புக் கருவிகளினால் போரடித்தார்களே.

ஆமோ 1:4 ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்; அது பெனாதாதின் அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:5 நான் தமஸ்குவின் தாழ்ப்பாளை உடைத்து, குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கிலும், செங்கோல் செலுத்துகிறவனைப் பெத்ஏதேனிலும் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்; அப்பொழுது சீரியாவின் ஜனங்கள் கீருக்குச் சிறைப்பட்டுப் போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்குக் காரணங்கள்

1. சீரியா - இவர்கள் கீலேயாத்தை இருப்புக் கருவிகளினால் போரடித்தார்கள். (ஆமோ 1:3)
2. பெலிஸ்தியா - இவர்கள் சிறைப் பட்டவர்களை ஏதோமியரிடத்தில் ஒப்புவிக்கும்படி முழுதும் சிறையாக்கினார்கள். (ஆமோ 1:6)
3. தீரு - இவர்கள் சகோதரரின் உடன்படிக்கையை நினையாமல், சிறைப் பட்டவர்களை முழுதும் ஏதோமியர் கையில் ஒப்பித்தார்கள். (ஆமோ 1:9)
4. ஏதோம் - இவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து, தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு, தன் மூர்க்கத்தை நித்தியகாலமாக வைத்திருக்கிறான். (ஆமோ 1:11)
5. அம்மோன் - இவர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்குக் கீலேயாத் தேசத்தின் கர்ப்பஸ்திரீகளைக் கீறிப்போட்டார்கள் (ஆமோ 1:13)
6. மோவாப் - இவன் ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாகச் சுட்டுப்போட்டான். (ஆமோ 2:1)
7. யூதா - இவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம் போனார்கள். (ஆமோ 2:4)
8. இஸ்ரவேல் - இவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்கள். (ஆமோ 2:6)

"ஆசகேல்" (Hazael) - (2இராஜா 8:12; 2இராஜா 10:32-33; 2இராஜா 13:3)

அரமனைகள் (palaces) - אַרְמוֹן - ar-mone' - 759

ஆ.பெ.சொ.-மாளிகை, கோட்டை, ராஜதானி, கோவில், அரண்மனை (ஆமோ 1:4,7,10,12,14; ஆமோ 2:2,5; ஆமோ 3:9,10,11; ஆமோ 6:8).

ஆமோஸ் - தொகுப்புரை

1 அதிகாரம்

"பெத்ஏதேன்" (Beth-eden) - இந்தப் பெயருக்குச் "சந்தோஷத்தின் வீடு" "house of pleasure" என்று பொருள். இது அசீரியாவில் இருக்கிறது. (2இராஜா 19:12).

4. பெலிஸ்தியாவிற்கு எதிராக - (ஏசா 14:28)

ஆமோ 1:6 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: காத்சாவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் சிறைப்பட்டவர்களை ஏதோமியரிடத்தில் ஒப்புவிக்கும்படி முழுதும் சிறையாக்கினார்களே.

ஆமோ 1:7 காத்சாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதினுடைய அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:8 நான் குடிகளை அஸ்தோத்திலும், செங்கோல் செலுத்துகிறவனை அஸ்கலோனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, பெலிஸ்தரில் மீதியானவர்கள் அழியும்படிக்கு என் கையை எக்ரோனுக்கு விரோதமாகத் திருப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

5. தீருவிற்கு எதிராக - (எசே 26:1)

ஆமோ 1:9 மேலும்: தீருவினுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலுபாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் சகோதரரின் உடன்படிக்கையை நினையாமல், சிறைப்பட்டவர்களை முழுதும் ஏதோமியர் கையில் ஒப்பித்தார்களே.

ஆமோ 1:10 தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"சகோதரரின் உடன்படிக்கை" - (2சாமு 5:11; 1இராஜா 5:1; 1இராஜா 9:11-14)

6. ஏதோமிற்கு எதிராக - (எரே 49:7)

ஆமோ 1:11 மேலும்: ஏதோமுடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து, தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு, தன் மூர்க்கத்தை நித்தியகாலமாக வைத்திருக்கிறானே.

ஆமோ 1:12 தேமானிலே தீக்கொளுத்துவேன்; அது போஸ்றாவின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து" - (ஆதி 27:41; உபா 23:7)

"தன் சகோதரன்" - யாக்கோபு இவனுடைய சகோதரன். (ஆதி 25:24-26).

"தேமான்" (Teman) - (யோபு 2:11; எரே 49:7; ஒப 1:9; ஆப 3:3)

7. அம்மோனுக்கு எதிராக - (எரே 49:1)

ஆமோ 1:13 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அம்மோன் புத்திரரின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்குக் கீலேயாத் தேசத்தின் கர்ப்பஸ்திரீகளைக் கீறிப் போட்டார்களே.

ஆமோ 1:14 ரப்பாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது யுத்தநாளின் முழக்கமாகவும், பெருங்காற்றின் புசலாகவும் அதின் அரமனைகளைப் பட்சிக்கும்.

ஆமோ 1:15 அவர்களுடைய ராஜாவும், அவனுடைய அதிபதிகளும் சிறைப்பட்டுப் போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோஸ் - தொகுப்புரை

1 அதிகாரம்

"கர்ப்பஸ்திரீகளைக் கீறிப்போட்டார்களே" - ஓசி 13:16; 2இராஜா 8:12; 2இராஜா 15:16 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது.

"ரப்பா" **(Rabbah)** - அம்மோனின் தலைநகரம். சவக்கடலுக்கு வடகிழக்கே 25மைல் தொலைவிலுள்ளது. (2சாமு 11:1; 2சாமு 12:25-27; எரே 49:2).

ஆமோஸ் - தொகுப்புரை

2 அதிகாரம்

8. மோவாபிற்கு எதிராக - *(ஏசா 15:1)*

ஆமோ 2:1 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மோவாபின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவன் ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாகச் சுட்டுப்போட்டானே.

ஆமோ 2:2 மோவாப்தேசத்தில் தீக்கொளுத்துவேன்; அது கீரியோத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்; மோவாபியர் அமளியோடும் ஆர்ப்பரிப்போடும் எக்காள சத்தத்தோடும் சாவார்கள்.

ஆமோ 2:3 நியாயாதிபதியை அவர்கள் நடுவில் இராதபடிக்கு நான் சங்காரம் பண்ணி, அவனோடுகூட அவர்களுடைய பிரபுக்களையெல்லாம் கொன்று போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாகச் சுட்டுப்போட்டானே" - இந்தச் சம்பவம் வேதாகமத்தில் வேறு எங்கும் கூறப்படவில்லை. மோவாபின் ராஜா ஏதோமின் ராஜா மீது இந்த அளவிற்குக் கோபத்தோடு இருக்கிறான். 2 இராஜா 3:26-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யுத்தத்தோடு இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம். மோவாபின் ராஜா ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை நீறாகச் சுட்டுப்போட்டது இந்த யுத்தத்திற்குப்பின்பும், ஆமோஸ் இந்தத் தீர்க்கதரிசனம் கூறுவதற்கு முன்பும் நடைபெற்றிருக்கிறது.

"நியாயாதிபதி" - இவன் செங்கோலைப் பிடித்திருக்கிற ராஜா.

II. யூதாவிற்கும் இஸ்ரவேலிற்கும் எதிராக தீர்க்கதரிசனங்கள் - *(2:4-16)*

1. யூதாவிற்கு எதிராக பாபிலோன் - *(ஏசா 13-14)*

ஆமோ 2:4 மேலும்: யூதாவின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்கள் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம் போனார்களே.

ஆமோ 2:5 யூதாவிலே நான் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2. இஸ்ரவேலுக்கு எதிராக அசீரியா - *(2 இராஜா 17)*

ஆமோ 2:6 மேலும்: இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்களுடைய ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்களே.

ஆமோ 2:7 அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணைவாரி இறைத்து, சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள்; என் பரிசுத்த நாமத்தைக் குலைச்சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.

ஆமோ 2:8 அவர்கள் சகல பீடங்களருகிலும் அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் படுத்துக் கொண்டு, தெண்டம் பிடிக்கப் பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடிக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோஸ் - தொகுப்புரை

2 அதிகாரம்

ஆமோ 2:9 நானோ: கேதுரு மரங்களைப்போல் உயரமும், கர்வாலி மரங்களைப்போல் வைரமுமாயிருந்த எமோரியனை அவர்களுக்கு முன்பாக அழித்தேன்; உயர இருந்த அவனுடைய கனியையும், தாழ இருந்த அவனுடைய வேர்களையும் அழித்துப்போட்டு,

ஆமோ 2:10 நீங்கள் எமோரியனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்ளும்படிக்கு உங்களை நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, உங்களை நாற்பது வருஷமாக வனாந்தரத்திலே வழிநடத்தி,

ஆமோ 2:11 உங்கள் குமாரரில் சிலரை தீர்க்கதரிசிகளாகவும், உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப் பண்ணினேன்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படி நான் செய்யவில்லையா என்று கர்த்தர் கேட்கிறார்.

ஆமோ 2:12 நீங்களோ நசரேயருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுத்து, தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டாம் என்று கற்பித்தீர்கள்.

ஆமோ 2:13 இதோ, கோதுமைக்கட்டுகள் நிறைபாரமாக ஏற்றப்பட்ட வண்டியில் இருத்துகிறதுபோல, நான் உங்களை நீங்கள் இருக்கிற ஸ்தலத்தில் இருத்துவேன்.

ஆமோ 2:14 அப்பொழுது வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை; பலவான் தன் பலத்தினால் பலப்படுவதுமில்லை; பராக்கிரமசாலி தன் பிராணனைத் தப்புவிப்பதுமில்லை.

ஆமோ 2:15 வில்லைப் பிடிக்கிறவன் நிற்பதுமில்லை; வேகமானவன் தன் கால்களால் தப்பிப்போவதுமில்லை; குதிரையின்மேல் ஏறுகிறவன் தன் பிராணனை இரட்சிப்பதுமில்லை.

ஆமோ 2:16 பலசாலிகளுக்குள்ளே தைரியவான் அந்நாளிலே நிர்வாணியாய் ஓடிப்போவான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஒரு ஜோடு பாதரட்சை" - ஏழை எளிய ஜனங்களை ஒடுக்குவதை இந்த வாக்கியம் விளக்குகிறது. எளியவர்கள் தங்களுடைய சொத்துக்களை இவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் ஒருவர் தன்னுடைய சொத்தை மற்றவருக்கு விற்கும் போது அவர் தன்னுடைய பாதரட்சைகளைக் கழற்றி, தன்னுடைய சொத்தை வாங்கியவரிடம் கொடுத்து விடுவது வழக்கம். தன்னுடைய சொத்தின்மீது தான் இதுவரையிலும் அதன் உரிமையாளராக நடந்து வந்த உரிமை இனிமேல் அதன் புதிய உரிமையாளருக்கே உரியது என்பதை இந்தச் செய்கை விளக்குகிறது. (சங் 60:8)

யூதா, இஸ்ரவேல் ஆகியவற்றின் பாதகங்கள்

1. அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்தார்கள். (ஆமோ 2:4)
2. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் போனார்கள்.
3. பொய்களினால் மோசம்போனார்கள்.
4. தங்கள் பிதாக்கள் செய்த பாவத்தைப் பின்பற்றினார்கள்.
5. அவர்கள் நீதிமானைப் பணத்துக்கு விற்றுப்போட்டார்கள். (ஆமோ 2:6)
6. எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கு விற்றுப்போட்டார்கள்.
7. அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணைவாரி இறைத்தார்கள். (ஆமோ 2:7)
8. சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள்.
9. மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.
10. அவர்கள் சகல பீடங்களருகிலும் அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் படுத்துக் கொள்கிறார்கள். (ஆமோ 2:8)

ஆமோஸ் - தொகுப்புரை

2 அதிகாரம்

11. தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடிக்கிறார்கள்.

12. நசரேயருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுக்கிறார்கள். (ஆமோ 2:12)

13. தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டாம் என்று கற்பிக்கிறார்கள்.

14. தேவனுக்குக் கோபமுண்டாக்கு கிறார்கள். (ஆமோ 2:13)

"அடைமானமாய் வாங்கின வஸ்திரங்கள்" - அடைமானமாய் வாங்கப்பட்ட வஸ்திரங்களை அதன் உரிமையாளரிடம் சூரியன் மறைவதற்குள் திரும்பக் கொடுத்துவிடவேண்டும். இரவு வேளையில் அவர்கள் தங்கள் சரீரங்களை மூடுவதற்கு இந்த வஸ்திரங்கள் பயன்படும். (யாத் 22:26; உபா 24:13-17). இங்கு அடைமானம் வாங்குகிறவர்கள் இந்தப் பிரமாணத்தை மீறுகிறார்கள். மேலும் பிரமாணத்தின்படி ஒரே பலிபீடமும், பலிகளைச் செலுத்துவதற்கு ஒரே ஸ்தலமும் இருக்க வேண்டும். ஆனால் இங்கோ பல தேவர்களுக்கு அநேக பலிபீடங்கள் கட்டப்பட்டு இந்தப் பிரமாணம் மீறப்படுகிறது.

கடந்தகால ஆசீர்வாதமும், தற்கால அழிவும்

1. கேதுருமரங்களைப்போல் உயரமும், கர்வாலி மரங்களைப்போல் வைரமுமாயிருந்த எமோரியனை அவர்களுக்கு முன்பாக அழித்தேன் (ஆமோ 2:9, யோசு 17:15-18).

2. நீங்கள் எமோரியனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்ளும்படிக்கு உங்களை நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, உங்களை நாற்பது வருஷமாக வனாந்தரத்திலே வழிநடத்தினேன். (ஆமோ 2:10; யாத் 12-19; உபா 29:4).

3. உங்கள் குமாரரில் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப் பண்ணினேன் (ஆமோ 2:11).

"நான் உங்களை நீங்கள் இருக்கிற ஸ்தலத்தில் இருத்துவேன்" - கர்த்தர் அவர்களுடைய ஏராளமான பாவங்களின் நிமித்தமாகவும், பல தலைமுறைகளாக அவர்கள் செய்துவந்த மீறுதல்களின் நிமித்தமாகவும் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய பாவத்தின் சுமை அதிகமாக உள்ளது. ஆகையினால் புறஜாதிதேசத்தார் அவர்களை அழிப்பதற்குக் கர்த்தர் அனுமதிக்கிறார். அவர்களுடைய மீறுதலின் ஆவியை முறிப்பதற்காகக் கர்த்தர் அவர்களைப் புறஜாதி தேசத்தார் மத்தியிலே சிதறிப்போகப் பண்ணுகிறார்.

ஆமோஸ் - தொகுப்புரை

3 அதிகாரம்

III. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலின் முழு குடும்பமும் - (3:1-4:13)

1. கேட்பதற்கும் பதில் கூறுவதற்கும் அழைப்பு

ஆமோ 3:1 இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக்கேளுங்கள்.

ஆமோ 3:2 பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்.

ஆமோ 3:3 இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?

ஆமோ 3:4 தனக்கு இரை அகப்படாமலிருக்கக் காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமோ? இரை பிடியாமல் இருக்கும்போது பாலசிங்கம் தன் கெபியிலிருந்து சத்தமிடுமோ?

ஆமோ 3:5 குருவிக்குத் தரையிலே சுருக்குப்போடப்படாதிருந்தால், அது கண்ணியில் அகப்படுமோ? ஒன்றும் படாதிருக்கையில், கண்ணி தரையிலிருந்து எடுக்கப்படுமோ?

ஆமோ 3:6 ஊரில் எக்காளம் ஊதினால், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?

ஆமோ 3:7 கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.

ஆமோ 3:8 சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம்சொல்லாதிருப்பான்?

தீர்க்கதரிசன எண் - 2

“இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின......” (ஆமோ 3:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன். (ஆமோ 3:2).
2. நீங்கள் சமாரியாவின் பர்வதங்களில், வந்துகூடி, அதின் நடுவில் நடக்கிற பெரிய கலகங்களையும் அதற்குள் செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள் என்று அஸ்தோத்தின் அரமனைகள்மேலும், எகிப்துதேசத்தின் அரமனைகள்மேலும் கூறுங்கள். (ஆமோ 3:9).
3. சத்துரு வந்து, தேசத்தைச் சூழ்ந்து கொள்வான். (ஆமோ 3:11).
4. உன் பெலத்தை உன்னிலிருந்து அற்றுப்போகப்பண்ணுவான்.
5. உன் அரமனைகள் கொள்ளையிடப்படும்.
6. ஒரு மேய்ப்பன் இரண்டு கால்களையாவது ஒரு காதின் துண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிக்குமாப் போல, சமாரியாவில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் ஒரு படுக்கையின் மூலையிலிருந்தும், ஒரு மஞ்சத்தின் மேலிருந்தும் தப்புவிக்கப்படுவார்கள் (ஆமோ 3:12).
7. நான் இஸ்ரவேலுடைய பாதகங்களினிமித்தம் அவனை விசாரிக்கும் நாளிலே நான் பெத்தேலின் பலிபீடங்களை விசாரிப்பேன் (ஆமோ 3:14).
8. பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும்.

ஆமோஸ் - தொகுப்புரை

3 அதிகாரம்

9. மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும் அழிப்பேன். (ஆமோ 3:15).

10. யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும்.

"இஸ்ரவேல் புத்திரரே ....உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனம்" - இஸ்ரவேல் புத்திரர் என்பது அவர்களுடைய எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்கும். கர்த்தர் அவர்கள் எல்லோரையும் எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தார். கர்த்தர் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறித்து பல தீர்க்கதரிசனங்கள் மூலமாகப் பேசியிருக்கிறார். வருங்காலத்தில் கர்த்தர் இஸ்ரவேலின்மீது ஒரு சித்தம் வைத்திருக்கிறார். அது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாருக்கும் உரியது. அதை யூதாவுக்கு மட்டுமென்றோ, எப்பிராயீமிற்கு மட்டுமென்றோ பிரிக்கக்கூடாது. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரோடும் கர்த்தர் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அவர்கள் எல்லோருக்குமே வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் அனைவரையுமே அழைத்திருப்பதினால் அவர்களுடைய மீறுதல்களுக்காகக் கர்த்தர் அவர்களை விசேஷித்த வழியில் தண்டிக்கிறார். ஏனெனில் பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் அவர்களைமாத்திரம் அறிந்துகொண்டார். ஆகையால் அவர்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் அவர்களைத் தண்டிக்கிறார். (ஆமோ 3:2).

"இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய" - (2கொரி 6:14-18)

2. இஸ்ரவேலின் பாவங்களைக் காணுமாறு அழைப்பு

ஆமோ 3:9 நீங்கள் சமாரியாவின் பர்வதங்களில், வந்துகூடி, அதின் நடுவில் நடக்கிற பெரிய கலகங்களையும் அதற்குள் செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள் என்று அஸ்தோத்தின் அரமனைகள்மேலும், எகிப்து தேசத்தின் அரமனைகள்மேலும் கூறுங்கள்.

ஆமோ 3:10 அவர்கள் செம்மையானதைச் செய்ய அறியாமல், தங்கள் அரமனைகளில் கொடுமையையும் கொள்ளையையும் குவித்துக் கொள்ளுகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோஸ் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தருடைய வசனத்தைக்கேளுங்கள். (ஆமோ 3:1).

2. அஸ்தோத்தின் அரமனைகள்மேலும், எகிப்துதேசத்தின் அரமனைகள்மேலும் கூறுங்கள். (ஆமோ 3:9).

3. சமாரியாவின் பர்வதங்களில், வந்துகூடுங்கள்.

4. அதின் நடுவில் நடக்கிற பெரிய கலகங்களையும் அதற்குள் செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள்.

5. நீங்கள் கேட்டு யாக்கோபு வம்சத்தாருக்குள்ளே சாட்சியாக அறிவியுங்கள். (ஆமோ 3:13).

6. தரித்திரரை ஒடுக்கும் பாசானின் மாடுகளைப் போன்றவர்களே இந்த வார்த்தைகளைக் கேளுங்கள் (ஆமோ 4:1).

7. பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள் (ஆமோ 4:4).

8. கில்காலுக்கும் போய்த் துரோகத்தைப் பெருகப்பண்ணுங்கள்.

9. காலைதோறும் உங்கள் பலிகளைச் செலுத்துங்கள்.

10. மூன்றாம் வருஷத்திலே உங்கள் தசமபாகங்களையும் செலுத்துங்கள்.

11. உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. (ஆமோ 4:12).

12. உங்களைக்குறித்து நான் புலம்பிச் சொல்லும் இந்த வசனத்தைக் கேளுங்கள். (ஆமோ 5:1).

13. பெத்தேலைத் தேடாதேயுங்கள் (ஆமோ 5:5).

ஆமோஸ் - தொகுப்புரை

3 அதிகாரம்

14. கில்காலிலும் சேராதேயுங்கள்.

15. பெயெர்செபாவுக்கும் போகாதேயுங்கள்.

16. கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் (ஆமோ 5:6).

17. அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினவரைத் தேடுங்கள். (ஆமோ 5:8).

18. தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள். (ஆமோ 5:14)

19. தீமையை வெறுத்து விடுங்கள். (ஆமோ 5:15).

20. நன்மையை விரும்புங்கள்.

21. ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்.

22. உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று (ஆமோ 5:23).

23. நியாயம் தண்ணீரைப்போல புரண்டு வரக்கடவது. (ஆமோ 5:24).

24. நீதிவற்றாத நதியைப்போல புரண்டு வரக்கடவது.

25. நீங்கள் கல்னேமட்டும் செல்லுங்கள். (ஆமோ 6:2)

26. அவ்விடத்திலிருந்து ஆமாத் என்னும் பெரிய பட்டணத்துக்குப் போங்கள்.

27. அதன் பின்பு காத்பட்டணத்துக்கு இறங்குங்கள்.

28. எளியவர்களை விழுங்குகிறவர்களே இதைக் கேளுங்கள். (ஆமோ 8:4).

3. அசீரியாவிடம் சிறையிருப்பு

ஆமோ 3:11 ஆகையால் சத்துரு வந்து, தேசத்தைச் சூழ்ந்துகொண்டு, உன் பெலத்தை உன்னிலிருந்து அற்றுப்போகப் பண்ணுவான்; அப்பொழுது உன் அரமனைகள் கொள்ளையிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆமோ 3:12 மேலும்: ஒரு மேய்ப்பன் இரண்டு கால்களையாவது ஒரு காதின் துண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிக்குமாப்போல, சமாரியாவில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் ஒரு படுக்கையின் மூலையிலிருந்தும், ஒரு மஞ்சத்தின் மேலிருந்தும் தப்புவிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 3:13 நீங்கள் கேட்டு யாக்கோபு வம்சத்தாருக்குள்ளே சாட்சியாகஅறிவிக்க வேண்டியது: சேனைகளின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்,

ஆமோ 3:14 நான் இஸ்ரவேலுடைய பாதகங்களினிமித்தம் அவனை விசாரிக்கும் நாளிலே நான் பெத்தேலின் பலிபீடங்களை விசாரிப்பேன்; பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும்.

ஆமோ 3:15 மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும் அழிப்பேன்; அப்பொழுது யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

“தப்புவிக்கப்படுவார்கள்” - வடக்கு ராஜ்யமாகிய சமாரியா அழிக்கப்படும். அதில் இஸ்ரவேலில் மீந்திருக்கும் கொஞ்சப்பேர் மட்டும் தப்புவிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேலின்மீது நியாயத்தீர்ப்பு

1. பெத்தேலின் பலிபீடங்கள் அழிக்கப்படும். (ஆமோ 3:14).

2. மாரிகாலத்து வீடும், கோடைகாலத்து வீடும் அழிக்கப்படும். (ஆமோ 3:15).

4. யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழிக்கப்படும்.

5. பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும்.

4 அதிகாரம்

4. இஸ்ரவேலின் பாவங்களும் நியாயத் தீர்ப்பும்

ஆமோ 4:1 சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்; தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி: நாங்கள் குடிக்கும்படிக்கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறீர்கள்.

ஆமோ 4:2 இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக் கொண்டு போகும் நாட்கள் வருமென்று அவர் தம்முடைய பரிசுத்தத்தைக்கொண்டு ஆணையிட்டார்.

ஆமோ 4:3 அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவனும் அரமனைக்குச் சுமந்து கொண்டு போவதை எறிந்துவிட்டு, தனக்கு எதிரான திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப்போவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பாசானின் மாடுகளே" - பாசான் சமாரியாவின் மலைகளில் உள்ளது. இஸ்ரவேல் புத்திரர் பாசானின் மாடுகளுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள். சமாரியாவிலுள்ள அலங்கங்களில் சத்துருக்கள் திறப்புகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அந்தத் திறப்புகளின் வழியாக இஸ்ரவேல் புத்திரர் தப்பித்துப் போவார்கள். (ஆமோ 4:3)

தீர்க்கதரிசன எண் - 3

"நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்......" (ஆமோ 4:1-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக் கொண்டுபோகும் நாட்கள் வரும். (ஆமோ 4:2).
2. நீங்கள் ஒவ்வொருவனும் அரமனைக்குள் எறியப்படுவீர்கள். (ஆமோ 4:3).
3. ஒவ்வொருவனும் தனக்கு எதிரான திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப் போவீர்கள்.
4. இஸ்ரவேலே, நீ உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. (ஆமோ 4:12).

இஸ்ரவேலின் பாவங்கள்

1. தரித்திரரை ஒடுக்குகிறார்கள்.
2. எளியவர்களை நொறுக்குகிறார்கள்.
3. குடித்து வெறித்திருக்கிறார்கள்.

"நாட்கள் வரும்" - இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு உட்பட்டுப் போகும் நாட்கள். புறஜாதி தேசத்தார் தங்களுடைய சிறைக்கைதிகளின் உதடுகளில் இரும்பு வளையங்களையும், தூண்டில் வளையங்களையும் போட்டு, அவர்களை இழுத்துச் செல்வது வழக்கம். சில தேசங்களில் கைதிகளுடைய மூக்குகளில் கொக்கிகளைப் போட்டு, இழுத்துச் செல்வார்கள். (ஏசா 37:29).

"திறப்புகள்" - நகரத்தின் அலங்கங்களில் சத்துருக்கள் திறப்புகளை உண்டாக்கியிருக்கிறார்கள். இதன் வழியாக மாடுகள் போவதைப்போல இஸ்ரவேல் புத்திரர் தப்பித்துப் போவார்கள்.

5. பெத்தேலில் இஸ்ரவேலின் மாயமாலம்

ஆமோ 4:4 பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள், கில்காலுக்கும் போய்த் துரோகத்தைப் பெருகப்பண்ணி, காலைதோறும் உங்கள் பலிகளையும், மூன்றாம் வருஷத்திலே உங்கள் தசமபாகங்களையும் செலுத்தி,

4. அதிகாரம்

ஆமோ 4:5 புளித்தமாவுள்ள ஸ்தோத்திர பலியோடே தூபங்காட்டி, உற்சாக பலிகளைக் கூறித் தெரியப்படுத்துங்கள்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

"பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள்" - இது எதிர்பொருள் கொள்ள வேண்டிய சொற்றொடராகும் (irony). தங்களுடைய துரோகத்தில் இவர்கள் தொடர்ந்திருக்க வேண்டுமென்று கர்த்தர் கூறுவதுபோல இந்த வாக்கியம் அமைந்திருக்கிறது. ஆனால் அவர்கள் துரோகம் பண்ணக்கூடாது என்பதே இதன் மெய்யான பொருளாகும். இஸ்ரவேல் புத்திரர் அதிகமாகப் பாவம் செய்தால், அவர்கள்மீது ஆக்கினைத் தீர்ப்பு அதிகரிக்கும். (ஆமோ 4:4-5; மத் 23:32).

6. தேவனுடைய ஐந்து நியாயத் தீர்ப்புக்கள் இஸ்ரவேலை உடைப்பதற்குப் பதிலாக கடினப் படுத்திற்று

ஆமோ 4:6 ஆகையால் நான் உங்கள் பட்டணங்களில் எல்லாம் உங்கள் பல்லுகளுக்கு ஓய்வையும், உங்கள் ஸ்தலங்களில் எல்லாம் அப்பக் குறைவையும் கட்டளையிட்டேன்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:7 இதுவுமல்லாமல், அறுப்புக் காலம்வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே மழையை நான் தடுத்தேன், ஒரு பட்டணத்தின்மேல் மழைபெய்யவும் ஒரு பட்டணத்தின்மேல் மழை பெய்யாமலி ருக்கவும் பண்ணினேன்; ஒரு வயலி ன்மேல் மழைபெய்தது, மழைபெய்யாத மற்ற வயல் காய்ந்துபோயிற்று.

ஆமோ 4:8 இரண்டு மூன்று பட்டணங்களின் மனுஷர் தண்ணீர் குடிக்க ஒரே பட்டணத்துக்குப்போய் அலைந்தும் தாகந்தீர்த்துக் கொள்ளவில்லை; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:9 கருக்காயினாலும் விஷப்பனியினாலும் உங்களை தண்டித்தேன்; உங்கள் சோலை களிலும் திராட்சத்தோட்டங்களிலும் அத்திமரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிகுதியானதைப் பச்சைப்புழு அரித்துப் போட்டது; ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:10 எகிப்திலே உண்டானதற்கு ஒத்த கொள்ளைநோயை உங்களுக்குள் அனுப்பினேன்; உங்கள் வாலிபரைப் பட்டயத்தாலே கொன்றேன்; உங்கள் குதிரைகளை அழித்துப்போட்டேன்; உங்கள் பாளயங்களின் நாற்றத்தை உங்கள் நாசிகளிலும் ஏறப்பண்ணினேன்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 4:11 சோதோமையும் கொமோராவையும் தேவன் கவிழ்த்துப் போட்டதுபோல, உங்களைக் கவிழ்த்துப் போட்டேன்; நீங்கள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப் போல இருந்தீர்கள்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின்மீது நியாயத்தீர்ப்புகள்

1. உங்கள் பட்டணங்களின்மீது பஞ்சத்தைக் கட்டளையிட்டேன். ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் (ஆமோ 4:6).
2. அறுப்புக்காலம்வர இன்னும் மூன்றுமாதம் இருக்கும்போதே மழையை நான் தடுத்தேன். ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் (ஆமோ 4:7-8).

4 அதிகாரம்

3. கருக்காயினாலும் விஷப்பனியினாலும் உங்களை தண்டித்தேன்; ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் (ஆமோ 4:9).

4. எகிப்திலே உண்டானதற்கு ஒத்த கொள்ளைநோயை உங்களுக்குள் அனுப்பினேன்; ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் (ஆமோ 4:10).

5. சோதோமையும் கொமோராவையும் தேவன் கவிழ்த்துப்போட்டதுபோல, உங்களைக் கவிழ்த்துப்போட்டேன். ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள். (ஆமோ 4:11).

7. தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

ஆமோ 4:12 ஆகையால் இஸ்ரவேலே, இந்தப்பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.

ஆமோ 4:13 அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும், மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவரும், விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரும், பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின் மேல் உலாவுகிறவருமாயிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

“இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால்” - இவ்வளவு நியாயத்தீர்ப்புகளைக் கர்த்தர் இஸ்ரவேல்மீது செய்திருந்தாலும், அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பவில்லை. ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தையே அழித்து அவர்களைப் புறஜாதியார் மத்தியில் சிதறிப்போகுமாறு செய்து விடுகிறார். இப்படிப்பட்ட நிலைமை இஸ்ரவேல் புத்திரருக்கு வரப்போகிறபடியினால் அவர்கள் தங்கள் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்பட வேண்டுமென்று அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தை கூறப்படுகிறது.

ஆயத்தப்பட வேண்டிய காரியங்கள்

1. உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.
2. உனக்காக ஒரு வழியை ஆயத்தம்பண்ணு. (உபா 19:3).
3. உங்களுடைய இருதயங்களை ஆயத்தம் பண்ணுங்கள். (1சாமு 7:3; 1நாளா 29:18).
4. அக்கிரமம் இல்லாமலிருக்க ஆயத்தம் பண்ணுங்கள். (சங் 59:4).
5. தயையையும், உண்மையையும் ஆயத்தம்பண்ணு. (சங் 61:7)
6. கிரியையை ஆயத்தம் பண்ணு. (நீதி 24:27).
7. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுங்கள். (ஏசா 40:3; மத் 3:3)
8. ஜனங்களுடைய வழிகளை ஆயத்தம் பண்ணுங்கள். (ஏசா 62:10).

தேவனுடைய பெரிய கிரியைகள்

1. பர்வதங்களை உருவாக்கினவர்.
2. காற்றைச் சிருஷ்டித்தவர்.
3. மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவர். (சங் 139:2; தானி 2:28)
4. விடியற் காலத்தை அந்தகாரமாக்குகிறவர். (ஆமோ 5:8; ஆமோ 8:9; யோவே 2:30-32)
5. பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின் மேல் உலாவுகிறவர். (உபா 32:13; உபா 33:29; மீகா 1:3)

ஆமோஸ் – தொகுப்புரை

4 அதிகாரம்

சிருஷ்டித்தல் (createth) - בָּרָא - baw-raw' - 1254

வினைச்சொல் - சிருஷ்டி, உண்டாக்கு, படை, நேரிடச்செய், வெட்டிப்போடு, தெரிந்துகொள், கொழுக்கப்பண்ணு (to bring into existence something new)

5 அதிகாரம்

IV. புலம்பல்கள், நியாயத்தீர்ப்புக்கள், புத்திமதிகள் - (5:1-6:4)

1. புலம்பல் - இஸ்ரவேலின் அழிவு 90 சதவீதம் இருக்கும்

ஆமோ 5:1 இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்களைக்குறித்து நான் புலம்பிச் சொல்லும் இந்த வசனத்தைக் கேளுங்கள்.

ஆமோ 5:2 இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள்; அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டாள்; தன் தேசத்தில் விழுந்துகிடக்கிறாள், அவளை எடுப்பாரில்லை.

ஆமோ 5:3 நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம்பேரில் நூறுபேரும், நூறுபேரில் பத்துப்பேரும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு மீந்திருப்பார்கள் என்று கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 4

"இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்களைக் குறித்து ......" (ஆமோ 5:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. இஸ்ரவேல் என்னும் கன்னிகை விழுந்தாள் (ஆமோ 5:2).
2. அவள் இனி ஒருபோதும் எழுந்திருக்க மாட்டாள்.
3. தன் தேசத்தில் விழுந்துகிடக்கிறாள், அவளை எடுப்பாரில்லை.
4. நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம்பேரில் நூறுபேர் மீந்திருப்பார்கள். (ஆமோ 5:3).
5. நகரத்திலிருந்து புறப்பட்ட நூறுபேரில் பத்துபேர் மீந்திருப்பார்கள்.
6. கில்கால் சிறையிருப்பாகப் போகும். (ஆமோ 5:5).
7. பெத்தேல் பாழான ஸ்தலமாகப் போகும்.

"உங்களைக்குறித்து" - ஆமோஸ் வடக்கு ராஜ்யத்திற்கு எதிராகத் தீர்க்கதரிசனம் கூறுகிறார். வடக்கு ராஜ்யம் விழுந்து அழிந்துபோகும் என்று முன்னறிவிக்கிறார். (ஆமோ 5:1-3).

"நகரத்திலிருந்து புறப்பட்ட ஆயிரம்பேரில் நூறுபேரும்" - இஸ்ரவேலில் பத்து சதவீதம் பேர் மட்டுமே மீந்திருப்பார்கள். மற்றவர்கள் அழிக்கப்படுவார்கள் அல்லது சிறையிருப்புக்கு உட்படுத்தப்படுவார்கள்.

2. நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு மூன்று அம்ச புத்திமதி

ஆமோ 5:4 கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.

ஆமோ 5:5 பெத்தேலைத் தேடாதேயுங்கள், கில்காலிலும் சேராதேயுங்கள், பெயெர்செபாவுக்கும் போகாதேயுங்கள்; ஏனென்றால் கில்கால் சிறையிருப்பாகவும், பெத்தேல் பாழான ஸ்தலமாகவும் போகும்.

ஆமோ 5:6 கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இல்லாவிட்டால் பெத்தேலில் இருக்கிற ஒருவராலும் அவிக்கப்படாத அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி, அதைப் பட்சிக்கும்.

ஆமோ 5:7 நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப் பண்ணுகிறவர்களே, அவரைத் தேடுங்கள்.

ஆமோ 5:8 அவர் அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினவர்; அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றி, பகலை இராத்திரியாக அந்தகாரப் படுத்துகிறவர்; அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

ஆமோஸ் – தொகுப்புரை

5 அதிகாரம்

ஆமோ 5:9 அரணான ஸ்தலத்தின்மேல் பாழ்க்கடிப்பு வரத்தக்கதாக, அவர் கொள்ளை கொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப் பண்ணுகிறவர்.

தேவனைத்தேட வேண்டுமென்னும் ஆலோசனை

1. என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள். (ஆமோ 5:4). பெத்தேல், கில்கால், பெயெர்செபா ஆகியவற்றின் விக்கிரகங்கள் அவர்களைச் சிறையிருப்புக்கு இழுத்துச் சென்றன. (ஆமோ 5:5). கர்த்தரைச் சார்ந்திருந்தால் இஸ்ரவேல் புத்திரர் பிழைப்பார்கள்.

2. கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் (ஆமோ 5:6). தேடவில்லை யென்றால், அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும். அவர்களுடைய விக்கிரகங்கள் அவர்களைப் பிழைக்கச் செய்யாது. (ஆமோ 5:6-7).

3. தேட வேண்டியவர்

   (1) அறுமீனையும் மிருக சீரிஷத்தையும் உண்டாக்கினவர் (ஆமோ 5:8)

   (2) மரண இருளை விடியற்காலமாக மாற்றினவர்

   (3) பகலை இராத்திரியாக அந்தகாரப் படுத்துகிறவர்.

   (4) சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளைப் பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்

   (5) கொள்ளை கொடுத்தவனைப் பலத்த வனுக்கு விரோதமாய் லகுவடையப் பண்ணுகிறவர். (ஆமோ 5:9).

"பெத்தேலைத் தேடாதேயுங்கள்" - பெத்தேலும், கில்காலும் இஸ்ரவேலின் விக்கிரகாராதனை ஸ்தலங்களாக உள்ளன. (ஆமோ 4:4; ஆமோ 8:14; ஓசி 4:15; ஓசி 10:8).

"பிழைப்பீர்கள்" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடினால் அவர்கள் பிழைப்பார்கள் என்று இந்த அதிகாரத்தில் இரண்டுமுறை கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் சிருஷ்டிகர். சர்வ ஞானமுடையவர். சகலத்திற்கும் அதிபதியாக இருக்கிறவர். (ஆமோ 5:6,8; ஆமோ 4:13).

"அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி, அதைப் பட்சிக்கும்" - யோசேப்பின் வீடு என்பது வடக்கு ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. (ஆமோ 5:8; ஆமோ 5:15). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடாவிட்டால் அவர்கள் பட்சிக்கப்படுவார்கள். பெத்தேலில் இருக்கிற ஒருவராலும் அந்த அக்கினியை அவிக்க முடியாது. (ஆமோ 5:8).

ஜனங்கள் செய்யும் காரியங்கள்

1. நியாயத்தை எட்டியாக மாற்றுகிறார்கள். (உபா 29:18-20).

2. நீதியைத் தரையிலே விழப் பண்ணுகிறார்கள். (தானி 8:12; ரோமர் 1:18).

மரண இருள் (shadow of death) - צַלְמָוֶת - tsal-maw' - 6757

ஆண்பால் பெயர்ச்சொல் - மரண இருள், மரணம், அந்தகாரம். **the shade of death; the nearness of death; death coming over one)** (யோபு 3:5; யோபு 10:21-22; யோபு 12:22; யோபு 16:16; யோபு 24:17; யோபு 28:3; யோபு 34:22; யோபு 38:17; சங் 23:4; சங் 44:19; சங் 107:10,14; ஏசா 9:2; எரே 2:6;எரே 13:16; ஆமோ 5:8; மத் 4:16; லூக்கா 1:79).

"அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்" - (ஆமோ 9:6; யோபு 38:34; ஏசா 48:13)

ஆமோஸ் – தொகுப்புரை

5 அதிகாரம்

"அவர் கொள்ளை கொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப் பண்ணுகிறவர்" - பலத்தவர்களைக் கர்த்தர் அழிப்பார். இதனால் அரண்கள் லகுவாகக் கைப்பற்றப்படும்.

3. பத்து அம்ச பாவங்களும் நியாயத் தீர்ப்பும்

ஆமோ 5:10 ஒலிமுகவாசலிலே கடிந்துகொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்.

ஆமோ 5:11 நீங்கள் தரித்திரனை மிதித்து, அவன் கையிலே, தானியத்தைச் சுமைசுமையாய் வாங்குகிறபடியினால், நீங்கள் பொளிந்த கற்களால் வீடுகளைக் கட்டினீர்கள், ஆனாலும் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை; இன்பமான திராட்சத்தோட்டங்களை நாட்டினீர்கள், ஆனாலும் அவைகளின் இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை.

ஆமோ 5:12 உங்கள் மீறுதல்கள் மிகுதியென்றும், உங்கள் பாவங்கள் பலத்ததென்றும் அறிவேன்; நீதிமானை ஒடுக்கி, பரிதானம் வாங்கி, ஒலிமுகவாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்.

ஆமோ 5:13 ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்க வேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. கடிந்து கொள்ளுகிறவனைப் பகைக்கிறார்கள். (ஆமோ 5:10)
2. யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்.
3. தரித்திரனை மிதிக்கிறார்கள். (ஆமோ 5:11)
4. தரித்திரன் கையிலே, தானியத்தைச் சுமைசுமையாய் வாங்குகிறார்கள்.
5. பொளிந்த கற்களால் வீடுகளைக் கட்டி பெருமையோடு வாழுகிறார்கள்.
6. நீதிமானை ஒடுக்குகிறார்கள் (ஆமோ 5:12).
7. பரிதானம் வாங்குகிறார்கள்.
8. நன்மையை வெறுத்து தீமையை விரும்புகிறார்கள். (ஆமோ 5:15)

தீர்க்கதரிசன எண் - 5

"நீங்கள் தரித்திரனை மிதித்து, அவன் கையிலே, தானியத்தைச் சுமைசுமையாய் வாங்குகிறபடியினால்......" (ஆமோ 5:11-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேதிய முன்னறிவிப்புகள்

1. நீங்கள் பொளிந்த கற்களால் வீடுகளைக் கட்டினீர்கள், ஆனாலும் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை. (ஆமோ 5:11).
2. இன்பமான திராட்சத்தோட்டங்களை நாட்டினீர்கள், ஆனாலும் அவைகளின் இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை.
3. புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம். (ஆமோ 5:13).

4. வரப்போகிற நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு நான்கு அம்ச புத்திமதி

ஆமோ 5:14 நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.

ஆமோ 5:15 நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலி முகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்; ஒருவேளை சேனைகளின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார்.

ஆமோஸ் - தொகுப்புரை

5 அதிகாரம்

ஜீவ இரகசியம்

1. தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள். (ஆமோ 5:14).
2. தீமையை வெறுங்கள். (ஆமோ 5:15).
3. நன்மையை விரும்புங்கள்.
4. ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப் படுத்துங்கள்.

"ஒருவேளை சேனைகளின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார்" - கர்த்தர் இரங்குவது உறுதியல்ல. ஆகையினால் "ஒருவேளை" இரங்குவார் என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தீமையை வெறுத்து நன்மையை விரும்பி, நியாயத்தை நிலைப்படுத்த வேண்டும். அவர்கள் இதையெல்லாம் செய்வார்களா என்று உறுதியாகத் தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் இதைச் செய்தால்தான், கர்த்தர் அவர்களுக்கு இரங்குவார். ஆசீர்வாதத்தின் நிபந்தனைகளை இஸ்ரவேல் புத்திரர் கடைப்பிடிக்கவில்லை யென்றால், கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு வராது. (யாத் 32:30; 2இராஜா 19:4; யோவே 2:14).

5. ஐந்து அம்ச புலம்பல் - காரணம்

ஆமோ 5:16 ஆதலால் ஆண்டவரும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எல்லாத்தெருக்களிலும் புலம்பல் உண்டாகும்; எல்லா வீதிகளிலும் ஐயோ! ஐயோ! என்று ஒலமிடுவார்கள்; பயிரிடுகிறவர்களைத் துக்கங் கொண்டாடுகிறதற்கும், ஒப்பாரிபாட அறிந்தவர்களைப் புலம்புகிறதற்கும் வரவழைப்பார்கள்.

ஆமோ 5:17 எல்லாத் திராட்சத் தோட்டங்களிலும் புலம்பல் உண்டாயிருக்கும், நான் உன் நடுவே கடந்துபோவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 6

"ஆதலால் ஆண்டவரும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்....." (ஆமோ 5:16-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும்நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. எல்லாத்தெருக்களிலும் புலம்பல் உண்டாகும் (ஆமோ 5:16).
2. எல்லா வீதிகளிலும் ஐயோ! ஐயோ! என்று ஒலமிடுவார்கள்.
3. பயிரிடுகிறவர்களைத் துக்கங் கொண்டாடுகிறதற்கு வரவழைப்பார்கள்.
4. ஒப்பாரிபாட அறிந்தவர்களைப் புலம்புகிறதற்கு வரவழைப்பார்கள்.
5. எல்லாத் திராட்சத்தோட்டங்களிலும் புலம்பல் உண்டாயிருக்கும் (ஆமோ 5:17).
6. கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! (ஆமோ 5:18).
7. கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகார மாயிருக்கும். (ஆமோ 5:18,20).
8. கர்த்தருடைய நாள் ஆச்சரியமானதும், குழப்பமானதுமாக இருக்கும். (ஆமோ 5:19).

6. கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ

ஆமோ 5:18 கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும்.

ஆமோ 5:19 சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக்கரடி எதிர்ப்பட்டது போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்.

5 அதிகாரம்

ஆமோ 5:20 கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்கு மல்லவோ?

7. ஏழு அம்ச மாய்மாலம்

ஆமோ 5:21 உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை.

ஆமோ 5:22 உங்கள் தகனபலிகளையும் போஜனபலி களையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்க மாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.

ஆமோ 5:23 உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்.

ஆமோ 5:24 நியாயம் தண்ணீரைப் போலவும், நீதிவற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது.

தேவனுடைய கிரியைகள் (ஆமோ 5:21-23)

1. பகைக்கிறேன்.
2. வெறுக்கிறேன்
3. எனக்குப் பிரியமில்லை.
4. நான் அங்கீகரிக்கமாட்டேன்
5. நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.
6. நான் கேட்கமாட்டேன்.

தேவன் வெறுக்கும் காரியங்கள்

1. அவர்களுடைய பண்டிகைகள் (ஆமோ 5:21)
2. அவர்களுடைய ஆசரிப்பு நாட்கள்.
3. அவர்களுடைய தகனபலிகள் (ஆமோ 5:22)
4. அவர்களுடைய போஜனபலிகள்
5. கொழுமையான மிருகங்களின் ஸ்தோத்திரபலிகள்.
6. அவர்களுடைய பாட்டுகளின் இரைச்சல் (ஆமோ 5:23)
7. அவர்களுடைய வீணைகளின் ஓசை

"நியாயம் தண்ணீரைப்போலவும்" - கர்த்தர் நீதியையும், நியாயத்தையும் வலியுறுத்துகிறார். அந்த நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவர வேண்டுமென்று விரும்புகிறார். இந்தப் பூமியிலுள்ள அநியாயத்தையும், அநீதியையும் கர்த்தருடைய பிள்ளைகள் எதிர்கொள்ள வேண்டுமென்றால் நீதி, நியாயம் என்னும் வற்றாத நதிகள் கர்த்தருடைய சமுகத்திலிருந்து பிரவாகித்து வரவேண்டும்.

8. விக்கிரகாராதனையும் நியாயத் தீர்ப்பும்

ஆமோ 5:25 இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலே இருந்த நாற்பது வருஷம்வரையில் பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ?

ஆமோ 5:26 நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திரராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டுவந்தீர்களே.

ஆமோ 5:27 ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோஸ் – தொகுப்புரை

5 அதிகாரம்

"பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ?" - இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தினார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருக்கு மாத்திரமென்று பலிகளைச் செலுத்தாமல் விக்கிரகங்களுக்கும் செலுத்தினார்கள். கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் சேவிக்க வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இக்காலத்தில் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தாமல் பிசாசுகளுக்குப் பலிகளைச் செலுத்தியதாக மோசே கூறியிருக்கிறார். (உபா 32:17). அவர்கள் விக்கிரகங்களைப் பின்பற்றிப் போனார்கள் என்று எசேக்கியேல் குறிப்பிட்டிருக்கிறார். (எசே 20:16).

"நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும்" - இஸ்ரவேல் புத்திரர் மோளோகுக்குக் கூடாரத்தை உண்டாக்கினார்கள். தேவர்களின் சொரூபங்களைச் சப்பரத்தில் சுமந்து கொண்டு வந்தார்கள். இதற்காக அவர்கள் தமஸ்குவிற்கு அப்பாலே அசீரியாவில் சிறையிருப்புக்குப் போவார்கள். (ஆமோ 5:26-27).

கூடாரம் **(tabernacle) - סִכּוּת - sik-kooth' - 5522**

பெயர்ச்சொல் - சிகுத் (புறஜாதி தெய்வம்) **(booth)** - இது சுமந்து செல்லக்கூடிய சப்பரத்தைப் போன்றது. பவுலின் காலத்தில் தெமேத்திரியு என்னும் தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்தான். (அப் 19:24). "சிகுத்" என்பது இதைப்போன்ற சிறிய கோவிலாகும்.

"மோளோகு" - (அப் 7:43) இது அம்மோனியரின் தெய்வம். இந்தத் தெய்வத்திற்கு ஜனங்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தீக்கடக்கப் பண்ணி பலியிடுவார்கள். (உபா 18:10; லேவி 18:21; லேவி 20:2; 2இராஜா 16:3; 2இராஜா 21:6; 2இராஜா 23:10; எரே 19:5; எரே 32:35) மோளோகு சூரிய தேவன் என்றும் அழைக்கப்படுகிறது. மோளோகின் சிலையை வெண்கலத்தால் செய்தார்கள். இதற்கு எருதின் முகமும், மனுஷனுடைய கைகளும் இருந்தது. இந்தச் சிலைக்கு நடுவில் இதைச் சூடுபண்ணுவதற்கு ஒரு அடுப்பு இருக்கும். அதில் எப்போதும் அக்கினி எரிந்து கொண்டேயிருக்கும். மோளோகின் கரங்கள் எப்போதும் நீட்டப்பட்டதாகவும், அக்கினியினால் சூடு ஏறியதாகவும் இருக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மோளோகின் சூடான கரங்களில் வைத்து, பலியிடுவார்கள். சூடு தாங்காமல் சிறு பிள்ளைகள் அழும்போது அதன் சத்தம் பெற்றோருக்கும், மற்றோருக்கும் கேட்காமல் இருப்பதற்காக வாத்தியக்கருவிகளை மோளோகின் ஆசாரியர்கள் அதிக தொனியோடு இசைப்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 7

"ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன்......" (ஆமோ 5:27-6:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் (ஆமோ 5:27).
2. சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களும் சமாரியாவின் பர்வதத்தை நம்பிக் கொண்டிருக்கிறவர்களும், ஜாதிகளின் தலைமையென்னப்பட்டு, இஸ்ரவேல் வம்சத்தார் தேடிவருகிறர்களுமாகிய உங்களுக்கு ஐயோ! (ஆமோ 6:1).

ஆமோஸ் - தொகுப்புரை

5 அதிகாரம்

3. ஆகையால் அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள் (ஆமோ 6:7).

4. செல்வமாய்ச் சயனித்தவர்களின் விருந்துகொண்டாடல் நின்றுபோகும்.

5. நான் நகரத்தையும் அதின் நிறைவையும் ஒப்புக் கொடுத்துவிடுவேன் (ஆமோ 6:8)

6. ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்தாலும் அவர்கள் செத்துப் போவார்கள். (ஆமோ 6:9).

7. அவர்களுடைய இனத்தானாவது, பிரேதத்தைத் தகிக்கிறவனாவது எலும்புகளை வீட்டிலிருந்து வெளியே கொண்டு போகும்படிக்கு, அவைகளை எடுத்து, வீட்டின் உட்புறத்திலே இருக்கிறவனை நோக்கி: உன்னிடத்தில் இன்னும் யாராயினும் உண்டோ என்று கேட்பான், அவன் இல்லையென்பான்; அப்பொழுது இவன்: நீ மௌனமாயிரு; கர்த்தருடைய நாமத்தைச் சொல்லலாகாது என்பான். (ஆமோ 6:10).

8. இதோ, கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்; பெரிய வீட்டைத் திறப்புகள் உண்டாகவும், சிறிய வீட்டை வெடிப்புகள் உண்டாகவும் அடிப்பார். (ஆமோ 6:11).

9. இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, நான் ஒரு ஜாதியை உங்களுக்கு விரோதமாக எழுப்புவேன் (ஆமோ 6:14).

10. அவர்கள் ஆமாத்துக்குள் பிரவேசிக்கிற வழி தொடங்கிச் சமனான நாட்டின் ஆறுமட்டாக உங்களை ஒடுக்குவார்கள் (ஆமோ 6:14).

6 அதிகாரம்

9. சீயோனிலே நிர்விசாரமாய் இருக்கிறவர்களுக்கும் மனுஷரை நம்புகிறவர்களுக்கும் ஐயோ

ஆமோ 6:1 சீயோனிலே நிர்விசாரமாயிருக் கிறவர்களும் சமாரியாவின் பர்வதத்தை நம்பிக் கொண்டிருக்கிறவர்களும், ஜாதிகளின் தலைமையென்னப்பட்டு, இஸ்ரவேல் வம்சத்தார் தேடிவருகிறர்களுமாகிய உங்களுக்கு ஐயோ!

ஆமோ 6:2 நீங்கள் கல்னேமட்டும் சென்று, அவ்விடத்திலிருந்து ஆமாத் என்னும் பெரிய பட்டணத்துக்குப் போய், பெலிஸ்தருடைய காத்பட்டணத்துக்கு இறங்கி, அவைகள் இந்த ராஜ்யங்களைப் பார்க்கிலும் நல்லவைகளோ என்றும், அவைகளின் எல்லைகள் உங்கள் எல்லைகளைப் பார்க்கிலும் விஸ்தாரமானவைகளோ என்றும் பாருங்கள்.

ஆமோ 6:3 தீங்குநாள் தூரமென்றெண்ணிக் கொடுமையின் ஆசனம் கிட்டிவரும்படிசெய்து,

ஆமோ 6:4 தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு, தங்கள் மஞ்சங்களின் மேல் சவுக்கியமாய்ச் சயனித்து, மந்தையிலுள்ள ஆட்டுக் குட்டிகளையும், மாட்டுத் தொழுவத்திலுள்ள கன்றுக் குட்டிகளையும் தின்று,

ஆமோ 6:5 தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி,

ஆமோ 6:6 பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமள தைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற் போகிறார்கள்.

"சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்கள்" - யூதாவின் பிரபுக்கள் இங்கு சமாரியாவில் இருக்கிறவர்களோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள்.

"கல்னே" (Calneh) - நிம்ரோத் என்னும் அரசன் டைகிரீஸ் நதியில் கல்னேயைக் கட்டினான். *(ஆதி 10:10).* மறுபெயர்கள் கல்னோ (Calno) *(ஏசா 10:9),* கன்னே (Cannah) *(எசே 27:23).*

இஸ்ரவேலின் பாவங்கள்

1. தீங்குநாள் தூரமென்றெண்ணிக் கொண்டிருக்கிறார்கள். *(ஆமோ 6:3).*
2. கொடுமையின் ஆசனம் கிட்டிவரும் படிசெய்கிறாகள்.
3. பாவம் செய்யும்போது சுகமாய் ஜீவிக்கிறார்கள். *(ஆமோ 6:4).*
4. மனச்சாட்சியில் மழுங்கிப் போனவர்களாகச் சந்தோஷப் படுகிறார்கள்.
5. தங்களுடைய குற்ற மனச்சாட்சியை மூடுவதற்காகத் தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணுகிறார்கள். *(ஆமோ 6:5).*
6. பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடிக்கிறார்கள். *(ஆமோ 6:6).*
7. சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள்.
8. வீண்காரியத்தில் (விக்கிரகங்களில்) மகிழுகிறார்கள். *(ஆமோ 6:13; ஆமோ 5:26).*

"தந்தக் கட்டில்கள்" - கட்டில்களில் தந்தம் பதித்திருக்கிறது. இதுபோலவே "யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள்" *(ஆமோ 3:15)* என்பது யானைத்தந்தம் பதிக்கப்பட்ட வீடுகள் என்று பொருள். வீடு முழுவதும் யானைத் தந்தத்தால் செய்யப்படவில்லை.

6 அதிகாரம்

"தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி" - தாவீதைப் போல கீதவாத்தியங்களை உண்டு பண்ணுவது பாவமான செயலல்ல. ஆனால் இவர்கள் இந்தக் கீதவாத்தியங்களைப் பாவமான காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். சபையில் இசை இசைக்கப்பட வேண்டும். (எபே 5:19) பரலோகத்திலும் இசைக்கு இடமுண்டு.

"யோசேப்பு" - வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரத்தார் "யோசேப்பு" என்று அழைக்கப் படுகிறார்கள். (ஆமோ 5:5,15).

10. அசீரியாவிடம் சிறையிருப்பு

ஆமோ 6:7 ஆகையால் அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள்; இப்படியே செல்வமாய்ச் சயனித்தவர்களின் விருந்து கொண்டாடல் நின்றுபோகும்.

ஆமோ 6:8 நான் யாக்கோபுடைய மேன்மையை வெறுத்து, அவனுடைய அரமனைகளைப் பகைக்கிறேன்; நான் நகரத்தையும் அதின் நிறைவையும் ஒப்புக்கொடுத்துவிடுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார் என்பதைச் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 6:9 ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்தாலும் அவர்கள் செத்துப்போவார்கள்.

ஆமோ 6:10 அவர்களுடைய இனத்தானாவது, பிரேதத்தைத் தகிக்கிறவனாவது எலும்புகளை வீட்டிலிருந்து வெளியேகொண்டு போகும்படிக்கு, அவைகளை எடுத்து, வீட்டின் உட்புறத்திலே இருக்கிறவனை நோக்கி: உன்னிடத்தில் இன்னும் யாராயினும் உண்டோ என்று கேட்பான், அவன் இல்லையென்பான்; அப்பொழுது இவன்: நீ மௌனமாயிரு; கர்த்தருடைய நாமத்தைச் சொல்லலாகாது என்பான்.

ஆமோ 6:11 இதோ, கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்; பெரிய வீட்டைத் திறப்புகள் உண்டாகவும், சிறிய வீட்டை வெடிப்புகள் உண்டாகவும் அடிப்பார்.

ஆமோ 6:12 கன்மலையின்மேல் குதிரைகள் ஓடுமோ? அங்கே ஒருவன் மாடுகளால் உழுவானோ? நியாயத்தை நஞ்சாகவும நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள்.

ஆமோ 6:13 நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக் கொம்புகளை உண்டாக்கிக் கொள்ளைவில்லையோ என்று சொல்லி, வீண்காரியத்தில் மகிழுகிறார்கள்.

ஆமோ 6:14 இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, நான் ஒரு ஜாதியை உங்களுக்கு விரோதமாக எழுப்புவேன்; அவர்கள் ஆமாத்துக்குள் பிரவேசிக்கிற வழி தொடங்கிச் சமனான நாட்டின் ஆறுமட்டாக உங்களை ஒடுக்குவார்கள் என்று சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

"அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள்" - எப்பிராயீம் தேசத்தார் பல்வேறு குழுக்களாகச் சிறையிருப்புக்குப் போனார்கள். யூதாவும் இக்காலத்தில் பல்வேறு குழுக்களாகச் சிறையிருப்புக்குப் போகும். (2இராஜா 15:19-20, 27-31; 2இராஜா 16:9-17:23).

"நான் யாக்கோபுடைய மேன்மையை வெறுத்து, அவனுடைய அரமனைகளைப் பகைக்கிறேன்" - இவர்கள் கர்த்தருடைய ஜனத்தார். கர்த்தர் இவர்கள்மீது பிரியமாக இருந்தார். ஆயினும் இவர்களுடைய பாவங்களின் நிமித்தமாகவும், கர்த்தருக்கு எதிராகச் செய்யும் கலகங்களின் நிமித்தமாகவும் கர்த்தர் இவர்களைப் பகைக்கிறார்.

"ஒரு வீட்டிலே பத்துப்பேர் மீதியாயிருந்தாலும்" - ஒரு நகரம் முற்றிக்கை போடப்பட்ட பின்பு, அந்த நகரத்தில் மீதமுள்ள ஜனங்கள் கொள்ளைநோயால் மடிந்து போவார்கள். அவர்களுடைய பிரேதங்களைத் தகிக்க வேண்டும். (ஆமோ 6:9-10).

ஆமோஸ் - தொகுப்புரை

6 அதிகாரம்

"பிரேதத்தைத் தகிக்கிறவனாவது" - இஸ்ரவேல் தேசத்தில் பொதுவாகப் பிரேதங்களை அடக்கம் பண்ணுவார்கள். ஆயினும் இந்த வசனத்திலும், 1சாமு 31:12 ஆவது வசனத்திலும் மாத்திரமே பிரேதம் தகிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது இஸ்ரவேல் தேசத்தில் பொதுவான வழக்கத்தில் இல்லை. ஓரியர் (Horites) மரித்தோரின் பிரேதங்களைத் தகிப்பார்கள்.

"எலும்புகளை வீட்டிலிருந்து வெளியே கொண்டு போகும்படிக்கு" - பிரேதங்கள் தகிக்கப்பட்ட பின்பு, அதன் எலும்புகள் மாத்திரமே தகிக்கப்படாமல் மீதியாக இருக்கும்.

"கர்த்தருடைய நாமத்தைச் சொல்லலாகாது" - நம்முடைய அசுத்தத்தில் நாம் கர்த்தரை ஆராதிக்கக்கூடாது. பிரேதங்களைத் தொடுகிறவர்கள் தீட்டானவர்கள். அவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டே பின்பே, கர்த்தருடைய நாமத்தைச் சொல்ல வேண்டும்.

"கன்மலையின்மேல் குதிரைகள் ஓடுமோ?" - எபிரெயருக்கும், கிழக்கு தேசத்தாருக்கும் குதிரைகளின் கால்களில் லாடம் அடிக்கும் பழக்கமில்லை. ஆகையினால் அவர்களுடைய குதிரைகள் கற்பாறையின்மீது ஓடாது. கிரேக்கரும், ரோமரும் குதிரைகளுக்கு லாடம் அடிக்கும் பழக்கத்தைக் கொண்டு வந்தார்கள். லாடத்தின் மூலமாக அவர்கள் குதிரைகளின் பிளந்த குளம்புகளை ஒன்றுசேர்ப்பார்கள். (ஏசா 5:28).

"ஆமாத்" (Hemath) - மறுபெயர் "Hamath" (ஆமோ 6:2,14).

7 அதிகாரம்

V. அடையாளங்கள் - தீர்க்க தரிசனங்கள் - *(7:1-9:15)*

1. வெட்டுக்கிளிகள் - அழிவு

ஆமோ 7:1 கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக்காண்பித்ததாவது: இதோ, ராஜாவினுடைய புல்லறுப்புக்குப்பின்பு இரண்டாம் கந்தாயத்துப் புல் முளைக்கத்தொடங்குகையில் அவர் வெட்டுக்கிளிகளை உண்டாக்கினார்.

ஆமோ 7:2 அவைகள் தேசத்தின் புல்லைத்தின்று தீர்ந்தபோது, நான்: கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும்; யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப்போனான் என்றேன்.

ஆமோ 7:3 கர்த்தர் அதற்கு மனஸ்தாபப் பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

தீர்க்கதரிசன எண் - 8

"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது:......" (ஆமோ 7:1-9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன் (ஆமோ 7:8).
2. இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.
3. ஈசாக்கின் மேடைகள் பாழாக்கப்படும். (ஆமோ 7:9).
4. இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமாக்கப்படும்.
5. நான் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பிவருவேன்.

ஆமோசின் தரிசனங்கள்

1. வெட்டுக்கிளிகள் தேசத்தை அழித்தது. ஆமோசின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். (ஆமோ 7:1-3).
2. அக்கினி தேசத்தை அழித்தது. ஆமோசின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். (ஆமோ 7:4-6).
3. தூக்குநூல். ஆமோஸ் இதைக் குறித்து ஜெபம் பண்ணவில்லை. (ஆமோ 7:7-9).

"மனஸ்தாபப்பட்டு" - கர்த்தர் தம்முடைய மனதை மாற்றிக் கொண்டார். (ஆமோ 7:3,6). தம்முடைய பிள்ளைகள் ஜெபிக்கும்போது கர்த்தர் பல சமயங்களில் தம்முடைய மனதை மாற்றிக் கொண்டிருக்கிறார். பூமியில் தமக்கு எதிராக உள்ள எல்லாக் கலகங்களையும் ஒடுக்கி, அழிக்க வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம். இதற்காகக் கர்த்தர் பல சமயங்களில் தேசத்தின்மீது சாபங்களையும், மேலும் பல சமயங்களில் ஆசீர்வாதங்களையும் அனுப்புகிறார். கர்த்தர் தம்முடைய மனதை மாற்றிக் கொண்டாலும் அவருடைய முடிவான சித்தம் ஒருபோதும் மாறுவதில்லை. (1கொரி 15:24-28).

2. அக்கினி - அழிவு

ஆமோ 7:4 கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, அக்கினியாலே நியாயம் விசாரிப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் ஏற்பட்டார்; அது மகா ஆழியைப் பட்சித்தது, அதில் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்ந்தது.

ஆமோ 7:5 அப்பொழுது நான்: கர்த்தராகிய ஆண்டவரே, நிறுத்துமே; யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான்? அவன் சிறுத்துப் போனான் என்றேன்.

ஆமோ 7:6 கர்த்தர் அதற்கு மனஸ்தாபப்பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

7 அதிகாரம்

3. தூக்குநூல் - இனிமேல் இரக்கமில்லை

ஆமோ 7:7 பின்பு அவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின்மேல் நின்றார்; அவர் கையில் தூக்குநூல் இருந்தது.

ஆமோ 7:8 கர்த்தர் என்னை நோக்கி: ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; தூக்குநூலைக் காண்கிறேன் என்றேன்; அப்பொழுது ஆண்டவர்: இதோ, இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.

ஆமோ 7:9 ஈசாக்கின் மேடைகள் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும்; நான் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பிவருவேன் என்றார்.

"ஈசாக்கின் மேடைகள்" - இவை விக்கிரகாராதனையின் மேடைகளைக் குறிக்கும்

"இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும்" - சமாரியா, பெத்தேல், கில்கால் ஆகிய விக்கிரகாராதனையின் மையங்கள் அழிக்கப்படும்போது இஸ்ரவேலின் விக்கிரக மேடைகளும் அழிக்கப்படும். (2இராஜா 17). யூதா அழிக்கப்பட்ட போது, சாலொமோன் கட்டிய தேவாலயமும் அழிக்கப்பட்டது. (2இராஜா 23-25).

"நான் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பிவருவேன்" - இந்த வாக்கியம் 2இராஜா 15:10 ஆவது வசனத்தின் பிரகாரம் நிறைவேறிற்று.

4. இராஜாவிற்கு முன்பாக அமத்சியா ஆமோசின்மீது குற்றம் சாட்டுகிறான்

ஆமோ 7:10 அப்பொழுது பெத்தேலில் ஆசாரியனான அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாமுக்கு ஆள் அனுப்பி: ஆமோஸ் இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவே உமக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணுகிறான்; தேசம் அவன் வார்த்தைகளையெல்லாம் சகிக்கமாட்டாது.

ஆமோ 7:11 எரொபெயாம் பட்டயத்தினால் சாவான் என்றும், இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைபிடித்துக் கொண்டு போகப்படுவான் என்றும் ஆமோஸ் சொல்லுகிறான் என்று சொல்லச் சொன்னான்.

ஆமோ 7:12 அமத்சியா ஆமோசை நோக்கி: தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம்சொல்லு.

ஆமோ 7:13 பெத்தேலிலே இனித் தீர்க்கதரிசனம்சொல்லாதே; அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்யத்தின் அரமனையுமாயிருக்கிறது என்றான்.

"பெத்தேலில் ஆசாரியனான அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாமுக்கு ஆள் அனுப்பி" - இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமாக்கப்படும் என்றும்,; எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாகக் கர்த்தர் பட்டயத்தோடே எழும்பிவருவார் என்றும் ஆமோஸ் முன்னறிவித்தார். (ஆமோ 7:9) பெத்தேலிலுள்ள விக்கிரகாராதனை மையத்திற்கு அமத்சியா பிரதான ஆசாரியனாக இருக்கிறான். யெரொபெயாமிற்கு விரோதமாகக் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தை அமத்சியா ராஜாவிற்கு அறிவிக்கிறான். மேலும் ராஜாவுக்கு விரோதமாக ஆமோஸ் கட்டுப்பாடு பண்ணுகிறான் என்றும் பொய்குற்றச்சாட்டு கூறுகிறான். (ஆமோ 7:10-13)

ஆமோஸ் - தொகுப்புரை

7 அதிகாரம்

"தேசம் அவன் வார்த்தைகளையெல்லாம் சகிக்கமாட்டாது" - இஸ்ரவேல் தேசத்தின்மீது ஆமோசின் தீர்க்கதரிசன வார்த்தைகள் வல்லமையாகக் கிரியை நடப்பிக்கிறது. தேசம் அவன் வார்த்தைகளையெல்லாம் சகிக்க மாட்டாதிருந்தது. (ஆமோ 7:10). ஒரு தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களிடத்தில் கூறும்போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது வழக்கம். ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறவர்களாக இருந்தால் அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகவும் எழும்புவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 9

"எரொபெயாம் பட்டயத்தினால் சாவான் என்றும்....." (ஆமோ 7:11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய்ப் பட்டயத்தோடே எழும்பிவருவேன் (ஆமோ 7:9,11).

2. இஸ்ரவேல் தன் தேசத்திலிருந்து சிறைபிடித்துக் கொண்டு போகப்படுவான் (ஆமோ 7:11).

"எரொபெயாம் பட்டயத்தினால் சாவான்" - யெரொபெயாமின் வீட்டாருக்கு எதிராக ஒரு பட்டயம் எழும்பிற்று. (ஆமோ 7:9,11; 2இராஜா 15:10). யெரொபெயாம் ஆமோசின் வார்த்தைகளைத் தன் கவனத்தில் எடுத்துக் கொண்டானா என்பது தெரியவில்லை.

"அமத்சியா ஆமோசை நோக்கி" - யெரொபெயாமிற்குப் பதிலாகப் பிரதான ஆசாரியனாகிய அமத்சியா ஆமோசிற்கு விரோதமாகச் செயல்படுகிறான். ஆமோஸ் யூதா தேசத்திற்கு ஓடிப்போய் அங்கு தீர்க்கதரிசனம் கூற வேண்டுமென்று அமத்சியா கூறுகிறான். (ஆமோ 7:12-13).

"பரிசுத்த ஸ்தலம்" - இஸ்ரவேலிலுள்ள பல பரிசுத்த ஸ்தலங்களில் இதுவும் அழிக்கப்பட்டது. (ஆமோ 7:9). கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை மனுஷனுடைய பரிசுத்த ஸ்தலமென்று அழைக்கக்கூடாது. எருசலேமிலுள்ள எந்தப் பிரதான ஆசாரியனும் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை மனுஷனுடைய பரிசுத்த ஸ்தலமென்று அழைக்கவில்லை.

5. அமத்சியாவிற்கு ஆமோசின் பதிலுரை

ஆமோ 7:14 ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்க தரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிற வனுமாயிருந்தேன்.

ஆமோ 7:15 ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்.

ஆமோ 7:16 இப்போதும் நீ கர்த்தருடைய வார்த்தையைக் கேள்; இஸ்ரவேலுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லாதே, ஈசாக்கின் வம்சத்தாருக்கு விரோதமாக ஒன்றையும் சொல்லாதே என்று சொல்லுகிறாயே.

ஆமோ 7:17 இதினிமித்தம்: உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக் கொள்ளப்படும்; நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப் போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக" - ஆமோஸ் அமத்சியாவிடம் கர்த்தர்தம்மை இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லுமாறு உரைத்ததை அறிவிக்கிறார். இதன் பின்பு ஆமோஸ் அமத்சியாவிற்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் கூறுகிறார். (ஆமோ 7:16-17).

ஆமோஸ் - தொகுப்புரை

7 அதிகாரம்

ஏற்கெனவே பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களைக் கர்த்தர் அழைத்த சம்பவங்கள்

1. மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த ஆமோசைக் கர்த்தர் அழைத்தார். (ஆமோ 7:14-15)
2. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசேயைக் கர்த்தர் அழைத்தார். (யாத் 3)
3. கோதுமையைப் போரடித்துக் கொண்டிருந்த கிதியோனைக் கர்த்தர் அழைத்தார். (நியா 6:11)
4. ஏலிக்கு ஊழியம் செய்து கொண்டிருந்த சாமுவேலைக் கர்த்தர் அழைத்தார். (1சாமு 2:18-36)
5. தன் தகப்பனுடைய கழுதைகளைத் தேடிப்போன சவுலைக் கர்த்தர் அழைத்தார். (1சாமு 9)
6. ஆடுகளின் பின்னே போன தாவீதைக் கர்த்தர் அழைத்தார். (1சாமு 16)
7. யோசேப்பின் வீட்டாருக்கு அதிகாரியாக இருந்த யெரொபெயாமைக் கர்த்தர் அழைத்தார். (1இராஜா 11:28-40)
8. உழுதுகொண்டிருந்த எலிசாவைக் கர்த்தர் அழைத்தார். (1இராஜா 19:19)
9. ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாக இருந்த நெகேமியாவைக் கர்த்தர் அழைத்தார். (நெகே 1:11-2:10)
10. நேபுகாத்நேச்சாரின் அரமனையில் அதிகாரியாகப் பணிபுரிந்த தானியேலைக் கர்த்தர் அழைத்தார். (தானி 1:19)
11. மீன்பிடித்துக் கொண்டிருந்த பேதுருவையும், அந்திரேயாவையும் கர்த்தர் அழைத்தார். (மத் 4:18-20)
12. மீன்பிடித்துக் கொண்டிருந்த யோவானையும், யாக்கோபையும் கர்த்தர் அழைத்தார். (மத் 4:21-22)
13. ஆயக்காரனாக இருந்த மத்தேயுவைக் கர்த்தர் அழைத்தார். (மத் 9:9)
14. பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தி கொலைபண்ணிக் கொண்டிருந்த பவுலைக் கர்த்தர் அழைத்தார். (அப் 9:1-25)

தீர்க்கதரிசன எண் - 10

"இப்போதும் நீ கர்த்தருடைய வார்த்தையைக் கேள்......" (ஆமோ 7:16-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள் (ஆமோ 7:17).
2. உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்.
3. உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக்கொள்ளப்படும்.
4. நீயோவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய்.
5. இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப் படுவான்.

"உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்" - அமத்சியாவின் குமாரரும், குமாரத்திகளும் யெரொபெயாமின் பிள்ளைகளைப்போலவே மரிப்பார்கள். (ஆமோ 7:9,11,17).

"இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டு போகப்படுவான்" - இஸ்ரவேல் சிறைப்பிடிக்கப்பட்டு கொண்டு போகப்படுவார்கள் என்பது ஆமோசின் புஸ்தகத்தில் 7 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ஆமோ 5:5,27; ஆமோ 6:7; ஆமோ 7:11,17; ஆமோ 9:4).

ஆமோஸ் - தொகுப்புரை

8 அதிகாரம்

6. பழுத்த பழங்களுள்ள கூடை - இஸ்ரவேல் விரைவில் அழிந்து போகும்

ஆமோ 8:1 பின்பு கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது: இதோ, பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை இருந்தது.

ஆமோ 8:2 அவர்: ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்? பழுத்த பழங்களுள்ள ஒரு கூடையைக் காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.

ஆமோ 8:3 அந்நாளிலே தேவாலயப் பாட்டுகள் அலறுதலாக மாறும்; எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 11

"பின்பு கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது:......." (ஆமோ 8:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது (ஆமோ 8:2).
2. இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.
3. அந்நாளிலே தேவாலயப்பாட்டுகள் அலறுதலாக மாறும். (ஆமோ 8:3).
4. எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் இருக்கும்.
5. அந்தப் பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும்.

"பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை இருந்தது" - இது கோடைகாலத்துப் பழங்களாகும். இவை விரைவில் கெட்டுப்போகும். இந்தப் பழங்கள் இஸ்ரவேலருக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் விரைவில் அழிக்கப்பட்டு, அசீரியாவின் சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படுவார்கள். (ஆமோ 8:1-3).

7. இஸ்ரவேலின் பத்து பாவங்கள்

ஆமோ 8:4 தேசத்தில் சிறுமைப் பட்டவர்களை ஒழியப்பண்ண, எளியவர்களை விழுங்கி:

ஆமோ 8:5 நாங்கள் மரக்காலைக் குறைத்து, சேக்கல் நிறையை அதிகமாக்கி, கள்ளத்தராசினால் வஞ்சித்து, தரித்திரரைப் பணத்துக்கும், எளியவர்களை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் கொள்ளும்படிக்கும், தானியத்தின் பதரை விற்கும்படிக்கும்,

ஆமோ 8:6 நாங்கள் தவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்டசாலைகளைத் திறக்கத்தக்கதாக ஓய்வுநாளும் எப்போது முடியும் என்று சொல்லுகிறவர்களே, இதைக் கேளுங்கள்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப் பண்ணுகிறார்கள். (ஆமோ 8:4)
2. எளியவர்களை விழுங்குகிறார்கள்.
3. மரக்காலைக் குறைத்து வஞ்சிக்கிறார்கள். (ஆமோ 8:5)
4. சேக்கல் நிறையை அதிகமாக்கி வஞ்சிக்கிறார்கள்.
5. கள்ளத்தராசினால் வஞ்சிக்கிறார்கள்.
6. தரித்திரரைப் பணத்துக்கும், எளியவர்களை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் கொள்ளும் படிக்கு வஞ்சிக்கிறார்கள்.

ஆமோஸ் - தொகுப்புரை

8 அதிகாரம்

7. தானியத்தின் பதரை விற்கிறார்கள்.

8. நாங்கள் தவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்டசாலைகளைத் திறக்கத்தக்கதாக ஓய்வுநாளும் எப்போதும் முடியும் என்று சொல்லுகிறார்கள். (ஆமோ 8:6)

8. நியாயத்தீர்ப்பும் அலைந்து திரிவதும்

ஆமோ 8:7 அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லையென்று கர்த்தர் யாக்கோபுடைய மகிமையின்பேரில் ஆணையிட்டார்.

ஆமோ 8:8 இதினிமித்தம் தேசம் அதிரவும், அதின் குடிகள் எல்லாம் துக்கிக்கவும், எங்கும் நதிகளாய்ப் புரண்டோடவும், எகிப்தின் ஆற்று வெள்ளத்தைப்போல் அடித்து, பெருவெள்ளமாகவும் வேண்டாமோ?

ஆமோ 8:9 அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப் பண்ணி, பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்தி,

ஆமோ 8:10 உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாகவும், உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்பலாகவும் மாறப்பண்ணி, சகல அரைகளிலும் இரட்டையும், சகல தலைகளிலும் மொட்டையையும் வருவித்து, அவர்களுடைய துக்கிப்பை ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்குச் சமானமாக்கி, அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆமோ 8:11 இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆமோ 8:12 அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள்.

ஆமோ 8:13 அந்நாளிலே சௌந்தரியமுள்ள கன்னிகைகளும் வாலிபரும் தாகத்தினால் சோர்ந்துபோவார்கள்.

ஆமோ 8:14 தாணே! உன் தேவனுடைய ஜீவனைக்கொண்டும், பெயெர்செபா மார்க்கத்தின் தேவனுடைய ஜீவனைக் கொண்டும் என்று சொல்லி, சமாரியாவின் தோஷத்தின்மேல் ஆணையிடுகிறவர்கள் விழுவார்கள்; இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டார்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 12

"அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லை....." (ஆமோ 8:7-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. இதினிமித்தம் தேசம் அதிரும். அதின் குடிகள் எல்லாம் துக்கிக்கும். (ஆமோ 8:8).
2. அழிவு நதிகளாய்ப் புரண்டோடும்.
3. அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணுவேன். (ஆமோ 8:9).

ஆமோஸ் - தொகுப்புரை

8 அதிகாரம்

4. பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப் படுத்துவேன்.

5. உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாக மாறப்பண்ணுவேன். (ஆமோ 8:10).

6. உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்பலாக மாறப்பண்ணுவேன்.

7. சகல அரைகளிலும் இரட்டை வருவிப்பேன்.

8. சகல தலைகளிலும் மொட்டையை வருவிப்பேன்.

9. அவர்களுடைய துக்கிப்பை ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிற துக்கிப்புக்குச் சமானமாக்குவேன்.

10. அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேன்.

11. கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் (ஆமோ 8:11).

12. அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத் தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற் போவார்கள். (ஆமோ 8:12).

13. அந்நாளிலே சௌந்தரியமுள்ள கன்னிகைகளும் வாலிபரும் தாகத்தினால் சோர்ந்துபோவார்கள். (ஆமோ 8:13).

14. சமாரியா, தாண், பெயர்செபா ஆகியவற்றின் விக்கிரகாராதனைக் காரர்கள் விழுவார்கள். இனி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டார்கள். (ஆமோ 8:14).

"எங்கும் நதிகளாய்ப் புரண்டோடவும்" - தேசத்தின்மீது அழிவு வரும். ஒரு நதியைப்போல அது பிரவாகித்து ஓடும். எகிப்தின் நைல் நதியைப்போல அது எல்லோரையும் அடித்துச் செல்லும்.

"நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி" - இதற்கு முன்பு கர்த்தர் சூரியனை அஸ்தமிக்கப்பண்ணின சம்பவம் நடைபெற்றுள்ளது. (யாத் 10:15-22; யாத் 14:20; யாத் 20:21; உபா 4:11; உபா 5:22-23; யோசு 24:7; சங் 105:28). வருங்கால உபத்திரவக் காலத்திலும் இந்தச் சம்பவம் ஐந்து முறை நடைபெறும். (வெளி 6:12).

தானியேலின் எழுபதாவது வாரத்தில் சூரியன் கருப்பாக மாறிய ஐந்து நிகழ்ச்சிகள்

1. ஆறாவது முத்திரையின்போது - வாரத்தின் ஆரம்பத்தில். (வெளி 6:12)
2. நான்காவது எக்காளத்தின்போது (வெளி 8:12)
3. ஐந்தாவது எக்காளத்தின்போது. (வெளி 9:2)
4. நான்காவது கலசத்தின் போது - வாரத்தின் இறுதியில் (வெளி 16:10)
5. உபத்திரவக்காலம் முடிந்தவுடன் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது. (மத் 24:29; ஏசா 13:10; எசே 32:7-8; யோவே 2:31; யோவே 3:15; அப் 2:16-21)

"தாண்...பெயெர்செபா...சமாரியா" - இவை இஸ்ரவேலில் விக்கிரகாராதனை நடைபெறும் இடங்களாகும். (ஆமோ 4:4; ஆமோ 5:5; ஓசி 4:15; ஓசி 9:15; ஓசி 12:11; 1இராஜா 12:26-30).

"விழுவார்கள்" - இஸ்ரவேல் தேசத்தார் வணங்கும் பொன்கன்றுக்குட்டிகள் கீழே விழும். (1இராஜா 12:26-30).

ஆமோஸ் - தொகுப்புரை

9 அதிகாரம்

9. போதிகையை அடி - முழுமையான அழிவு

ஆமோ 9:1 ஆண்டவரைப் பலிபீடத்தின் மேல் நிற்கக்கண்டேன்; அவர்: நீ வாசல் நிலைகள் அசையும்படி போதிகையை அடித்து, அவைகளை அவர்கள் எல்லாருடைய தலையின்மேலும் விழ உடைத்துப் போடு; அவர்களுக்குப் பின்னாகவரும் மீதியானவர்களை நான் பட்டயத்தினால் கொன்றுபோடுவேன்; அவர்களில் ஒடுகிறவன் ஒருவனும் தப்புவதுமில்லை, அவர்களில் தப்புகிறவன் ஒருவனும் இரட்சிக்கப்படுவதுமில்லை.

ஆமோ 9:2 அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிக் கொண்டாலும், என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும்; அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலுமிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன்.

ஆமோ 9:3 அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக் கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன்; அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்து கொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்.

ஆமோ 9:4 அவர்கள் தங்கள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப் போனாலும், அங்கே அவர்களைக் கொன்றுபோட பட்டயத்துக்கு நான் கட்டளையிட்டு, என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்.

தீர்க்கதரிசன எண் - 13

"ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கக்கண்டேன்...." (ஆமோ 9:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. அவர்களுக்குப் பின்னாகவரும் மீதியானவர்களை நான் பட்டயத்தினால் கொன்றுபோடுவேன். (ஆமோ 9:1).
2. அவர்களில் ஒடுகிறவன் ஒருவனும் தப்புவதுமில்லை, அவர்களில் தப்புகிறவன் ஒருவனும் இரட்சிக்கப்படுவதுமில்லை.
3. அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிக்கொண்டாலும், என் கை அவ்விடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும் (ஆமோ 9:2).
4. அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலுமிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன்.
5. அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன் (ஆமோ 9:3).
6. அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்து கொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்.
7. அவர்கள் தங்கள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப்போனாலும், அங்கே அவர்களைக் கொன்றுபோட பட்டயத்துக்கு நான் கட்டளையிடுவேன். (ஆமோ 9:4).
8. என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்.
9. அதின் குடிகளெல்லாரும் புலம்புவார்கள் (ஆமோ 9:5).
10. அதின் அழிவு எங்கும் நதியாய்ப் புரண்டோடி, எகிப்தினுடைய ஆற்று வெள்ளத்தைப்போல் வெள்ளமாகும்.

"ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கக்கண்டேன்" - மனுஷனால் தேவனைப் பிரத்தியட்சமாகப் பார்க்க முடியும். ஆமோஸ் ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கிறவராகக் காண்கிறார். (ஆமோ 9:1) கர்த்தர் வாசல்களின் நிலைகளை அசைக்கிறார். (ஏசா 6:1-4).

ஆமோஸ் - தொகுப்புரை

9 அதிகாரம்

கர்த்தரைப் பிரத்தியட்சமாகத் தரிசித்தவர்கள்

1. ஆதாமும், ஏவாளும் - இவர்களுடைய சிருஷ்டிப்பின் போது. (ஆதி 2:7,19-25).
2. ஆதாமும், ஏவாளும் - ஏதேன் தோட்டத்தில் (ஆதி 3:8-19).
3. காயீன் - (ஆதி 4:6,9,16).
4. பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள். (ஆதி 11:5)
5. ஆபிரகாம் (ஆதி 12:7)
6. ஆபிரகாம் - (ஆதி 17:1-22)
7. ஆபிரகாம் - (ஆதி 18:2, 4,8,16,33, ஆதி 18:20-23; ஆதி 19:1).
8. ஈசாக்கு - (ஆதி 18:2, ஆதி 26:2-4)
9. ஈசாக்கு - (ஆதி 26:24).
10. யாக்கோபு (ஆதி 28:12-15= ஆதி 35:1).
11. யாக்கோபு - (ஆதி 32:24-32)
12. யாக்கோபு ஆதி 35:9-15,
13. மோசே - (யாத் 3:1-4; அப் 7:30-34).
14. சகல ஜனங்கள் (யாத் 19:11-24; உபா 5:4,22-29).
15. இஸ்ரவேலின் 74 மூப்பர்கள் - (யாத் 24:1-11).
16. மோசே - (யாத் 24:12-18).
17. மோசே - (யாத் 33:9-11, எண் 14:14).
18. மோசே - (யாத் 33:12-23)
19. மோசே - (யாத் 34:5-9)
20. மோசேக்கும், இஸ்ரவேலர் அனைவருக்கும் - (லேவி 9:23-24)
21. துன்மார்க்கமான ஆசாரியர்கள் - (லேவி 10:1-2)
22. மோசே, மிரியாம், ஆரோன் - (எண் 12:4-5)
23. மோசே - (உபா 31:2,15-16, உபா 34:5-7)
24. பிலேயாம் - (எண் 22:20).
25. கழுதை - (எண் 22:23).
26. கழுதை - (எண் 22:24-25).
27. கழுதை - (எண் 22:26-27).
28. பிலேயாம் - (எண் 22:31-38).
29. பிலேயாம் - (எண் 23:3-10)
30. பிலேயாம் - (எண் 23:16-24)
31. யோசுவா - (யோசு 5:13-15, வெளி 19:10; வெளி 22:8-9)
32. இஸ்ரவேல் - (நியா 2:1-5).
33. கிதியோன் - (நியா 6:11-23)
34. மனோவாவின் மனைவி - (நியா 13:3-7).
35. மனோவாவும், அவன் மனைவியும் - (நியா 13:8-23)
36. சாமுவேல் - (1சாமு 3:10)
37. சாமுவேல் - (1சாமு 3:21)
38. எலியா - (1இராஜா 19:11-18)
39. தாவீது - (1நாளா 21:16-17, 2நாளா 3:1)

ஆமோஸ் - தொகுப்புரை

9 அதிகாரம்

40. யோபு - (யோபு 42:5).

41. ஏசாயா - (ஏசா 6)

42. ஆமோஸ் - (ஆமோ 9:1)

43. ஸ்தேவான் - (அப் 7:54-60)

44. யோவான் - (வெளி 1:10-18, வெளி 4:2-11; வெளி 5:1-13; வெளி 6:16; வெளி 7:9-17; வெளி 8:3-5; வெளி 11:16; வெளி 12:5; வெளி 14:1-5; வெளி 19:1-10; வெளி 21:3-7; வெளி 22:1-5).

இவர்களைத் தவிர மேலும் பல தீர்க்கதரிசிகளும் கர்த்தரைப் பிரத்தியட்சமாகத் தரிசித்திருக்கிறார்கள். கர்த்தருடைய கண்கள், தலைமுடி, அவருடைய சரீர அவயவங்கள், அவருடைய வஸ்திரம், இரதம் ஆகியவற்றைத் தீர்க்கதரிசிகள் தரிசித்திருக்கிறார்கள். எசேக்கியேல் (எசே 1:2-28; எசே 8:1-4; எசே 9:1-4; எசே 10:1-5,7-22; எசே 40:1-4, 6,8-9,11,13-14,17,19,24,28, 32,35, 45, 47-48; எசே 41:1,4-5,13,15; எசே 42:1,13,15-20; எசே 43:1-7); தானியேல் (தானி 7:9-14; தானி 10:5-9); சகரியா (சக 1:8-20; சக 2:1-13; சக 3:1-2; சக 4:1-5; சக 5:2-5,10; சக 6:4-5).

"பலிபீடம்" - இது யெரொபெயாம் ஒரு காலத்தில் நின்ற பலிபீடமாக இருக்கலாம். (1இராஜா 13:1).

"அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிக்கொண்டாலும்" - கர்த்தர் சர்வ வியாபகர். அவருடைய பிரசன்னத்திலிருந்து எந்த மனுஷனானாலும் மறைந்து தப்பித்துச் செல்ல முடியாது. கர்த்தர் தம்முடைய வல்லமையினால் மனுஷரைக் கண்டுபிடித்துத் தண்டிப்பார். அவருடைய வல்லமை வானத்திற்கும், பாதாளத்திற்கும் செல்லும். (ஆமோ 9:3,4).

10. சிதறிப்போவது பற்றிய கடைசி தீர்க்கதரிசனம்

ஆமோ 9:5 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்தைத் தொட, அது உருகிப்போம்; அப்பொழுது அதின் குடிகளெல்லாரும் புலம்புவார்கள்; எங்கும் நதியாய்ப் புரண்டோடி, எகிப்தினுடைய ஆற்று வெள்ளத்தைப்போல் வெள்ளமாகும்.

ஆமோ 9:6 அவர் வானத்தில் தமது மேலறைகளைக் கட்டி, பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தி, சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

ஆமோ 9:7 இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப் போல் இருக்கிறீர்கள் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் இஸ்ரவேலை எகிப்துதேசத்திலிருந்தும்,பெலிஸ்தரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் கொண்டு வரவில்லையோ?

ஆமோ 9:8 இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப் பட்டிருக்கிறது; அதை பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப்போடுவேன்; ஆகிலும் யாக்கோபின் வம்சத்தை முழுவதும் அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 9:9 இதோ, ஜல்லடையினால் சலித்தரிக்கிறது போல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும் படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும் ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை.

ஆமோ 9:10 தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள்.

ஆமோஸ் - தொகுப்புரை

9 அதிகாரம்

மேலறைகள் (stories) - מַעֲלָה - mah-al-aw' - 4609

பெண்பால் பெயர்ச்சொல் - மேலறைகள் **elevation; climactic progression; degrees; going up to heaven; spheres; ascensions. "stories"** (ஆமோ 9:6); **stairs** (2இராஜா 9:13; நெகே 3:15; நெகே 12:37; எசே40:6; எசே 43:7); **steps**(யாத்20:26; 1இராஜா 10:19-20; 2நாளா 9:18-19); **degrees** (2இராஜா 20:9-11; 1நாளா 17:17; **titles to** சங் 120-134; ஏசா 38:8); **group** (எஸ்றா 7:9).

கட்டுதல் (troop) אֲגֻדָּה - ag-ood-daw' - 92

பெபெசொ.-கொத்து, கட்டு, படை, அஸ்திபாரம், கட்டிடம் (**to bind; a band; bundle; knot; arch; troop**)

தேவனுடைய மகத்துவமான கிரியைகள்

1. தேவன் வானத்தில் தமது மேலறைகளைக் கட்டியிருக்கிறார்.
2. பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தியிருக்கிறார்.
3. சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறார்.

"நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப்போல் இருக்கிறீர்கள்" - எத்தியோப்பியர் கர்த்தருடைய உடன்படிக்கையின் கீழ் வராதவர்கள். இஸ்ரவேல் புத்திரர் உடன்படிக்கை இல்லாத எத்தியோப்பியரைப்போல இருக்கிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் சந்ததியிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் வந்திருந்தாலும் கர்த்தர் அவர்களை மற்றவர்களை நியாயம் விசாரிப்பதுபோலவே நியாயம் விசாரிப்பார்.

"கப்தோர்" (Caphtor) - கிரேத்தா தீவு.

"கீர்" (Kir) - மெசொப்பொத்தோமியாவின் கீழ் பகுதியிலுள்ள இடம்.

"பாவமுள்ள ராஜ்யம்" - இந்த வாக்கியம் பத்துக் கோத்திரத்தாரின் இஸ்ரவேல் ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. (ஆமோ 9:8). கர்த்தர் இந்தத் தேசத்தை அழித்துப் போடுவார். எல்லாக் கோத்திரங்களிலிருந்தும் ஒருசிலர் மாத்திரமே மீதியாக வைக்கப்படுவார்கள். இதனால் யாக்கோபின் வம்சம் முழுவதுமாக அழிக்கப்படாமல் வருங்காலத்தில் கூட்டிச் சேர்க்கப்படும்.

தீர்க்கதரிசன எண் - 14

"இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது......" (ஆமோ 9:8-15) ஆமோ 9:8 ஆவது வசனம்நிறைவேறிற்று. ஆமோ 9:9-15 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. பாவமுள்ள இஸ்ரவேல் ராஜ்யத்தைப் பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப் போடுவேன் (ஆமோ 9:8).
2. யாக்கோபின் வம்சத்தை முழுவதும் அழிக்கமாட்டேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. ஜல்லடையினால் சலித்தரிக்கிறது போல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும் படிக்கு நான் கட்டளையிடுவேன் (ஆமோ 9:9).
2. ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை.

9 அதிகாரம்

3. தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள். (ஆமோ 9:10).

4. ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளுவேன். (ஆமோ 9:11)

5. அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பிப்பேன். (ஆமோ 9:12).

6. அதின் திறப்புகளை அடைப்பேன்.

7. அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்துவேன்.

8. பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன்.

9. உழுகிறவன் அறுக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான். (ஆமோ 9:13).

10. திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான்.

11. பர்வதங்கள் திராட்சரசமாய் வடியும்.

12. மேடுகளெல்லாம் கரையும்.

13. என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன் (ஆமோ 9:14).

14. அவர்கள் பாழான நகரங்களைக் கட்டுவார்கள்.

15. அவைகளில் குடியிருப்பார்கள்.

16. திராட்சத் தோட்டங்களை நாட்டுவார்கள்.

17. அவைகளுடைய பழரசத்தைக் குடிப்பார்கள்.

18. தோட்டங்களை உண்டாக்குவார்கள்.

19. அவைகளின் கனிகளைப்புசிப்பார்கள்.

20. அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன் (ஆமோ 9:15)

21. நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை.

"ஜல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல்" - இஸ்ரவேல் வம்சத்தார் ஜல்லடையினால் சலித்தரிக்கப்படுவார்கள். தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள். (ஆமோ 9:10).

11. மேசியாவின்கீழ் தாவீதின் இராஜ்ஜியம் மீட்கப்படும்

- (அப் 15:13-17; ஏசா 9:6)

ஆமோ 9:11 ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு,

ஆமோ 9:12 அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.

"ஏதோமில் மீதியானவர்கள்" - (ஆமோ 9:12=அப் 15:17) இஸ்ரவேல் ஏதோமில் மீதியானவர்களைச் சுதந்தரிக்கும். சகல புறஜாதியார்களையும் தன் வசமாக்கிக் கொள்ளும். அப் 15:16 ஆவது வசனத்தில் "கர்த்தரைத் தேடும்படிக்கு" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏதோமும் புறஜாதி தேசங்களும்,இஸ்ரவேலுக்குக்கொடுக்கப்படும். அவர்கள் கர்த்தரைத் தேட வேண்டுமென்பதற்காகவே இவை அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தாவீதின் ராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்போது, மேசியா இந்த பூமியை ஆளுகை செய்யும்போது, ஜனங்கள் இதற்கு முன்பு இல்லாத அளவிற்கு அதிகமாகக் கர்த்தரைத் தேடுவார்கள். அக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (ஏசா 11:9).

9 அதிகாரம்

"அந்நாளிலே" - இந்த வாக்கியத்திற்கு ஆயிரம் வருஷ அரசாட்சி என்று பொருள். அப்போது மேசியா தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், தாவீதின் சிங்காசனத்தில் மறுபடியும் ஸ்தாபிக்கவும் யாக்கோபின் குடும்பத்தாரை நித்திய காலமாக ஆளுகை செய்யவும் வருவார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10) ஏசாயாவின் புஸ்தகத்தில் "அந்நாளிலே" என்னும் வாக்கியம் 44 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 5 முறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆமோ 2:16; ஆமோ 8:3,9,13; ஆமோ 9:11).

"விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து" - இந்த வாக்கியம் அப் 15:14-18 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இது சபைக்காலத்திற்குப் பின்பு நிறைவேறும். "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது". தாவீதின் கூடாரம் திரும்பவும் எடுப்பிக்கப்படும். சபை எடுத்துக்கொள்ளப் பட்ட பின்பே இந்தச் சம்பவம் நடைபெறும். எருசலேமின் அழிவையும், இஸ்ரவேல் புத்திரர் தேசங்கள் மத்தியில் சிதறிப்போவதையும் குறித்து சிமியோன் அறிவித்தார். (லூக்கா 21:20-4). கி.பி. 70 ஆம் வருஷத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்குத் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து எருசலேமில் ராஜாவாக இருந்து ஆட்சி புரியும் ஒருதேசம் இல்லை. வருங்காலத்தில் மேசியா தம்முடைய ராஜ்யத்தை திரும்பவும் ஸ்தாபிக்கும்போது இந்தச் சம்பவம் நிறைவேறும். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10).

"விழுந்துபோன" - தாவீதின் ராஜ்யமும், சிங்காசனமும் கி.மு. 606 ஆம் வருஷத்தில் அகற்றப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் தாவீதின் சிங்காசனம் மறுபடியும் திரும்ப எடுப்பித்துக் கட்டப்பட மாட்டாது.

"பூர்வநாட்களில் இருந்ததுபோல" - தாவீது ராஜாவாக இருந்த காலத்தைப்போல என்று பொருள். மேசியாவின்கீழ் தாவீது இஸ்ரவேலின் வருங்கால ராஜாவாக இருப்பார். (ஏசா 9:6-7; ஏசா 16:5; எரே 30:9; எசே 34:23-24; எசே 37:24-25; ஓசி 3:4-5).

12. இஸ்ரவேலின் வருங்கால மீட்பு

ஆமோ 9:13 இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப் பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்து பிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆமோ 9:14 என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக்கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப்புசிப்பார்கள்.

ஆமோ 9:15 அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

ஆமோஸ் - தொகுப்புரை

9 அதிகாரம்

"நாட்கள் வரும்" - இஸ்ரவேல் மீட்கப்படும் காலம், தாவீதின் சிங்காசனம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும் காலம், மேசியாவின்கீழ் தாவீதின் ராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும் காலம் ஆகியவை ஆமோ 9:13-15 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்" - இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரும், யூதாவின் இரண்டு கோத்திரத்தாரும் சிறையிருப்பிலிருந்து திருப்பப்படுவார்கள். பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். (ஏசா 11:10-12).

"அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்" - ஆமோஸ் எப்பிராயீமின் பத்துக் கோத்திரத்தாருக்குத் தீர்க்கதரிசியாக இருக்கிறார். பாலஸ்தீன தேசத்தில் அவர்கள் திரும்பவும் நாட்டப்படுவார்கள். அதே பாலஸ்தீன தேசம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அந்தத் தேசத்திலிருந்து அவர்களை யாரும் எடுத்துப் போடுவதில்லை.